லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-09 இதழ்-01 ஜூன் - 2020 மாதஇதழ் விலை ₹ 10

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INDIA
ISSN : 2582-5275

9ஆம் ஆண்டில் மக்கள் விசாரணை



# கடன் உதவியை வங்கிகள் உடனுக்குடன் வழங்க வேண்டும்

## முதல்வர் பழனிச்சாமி

makkalvisaranai





# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து

## பத்தியமில்லா மருந்து

### குணமாகும் நோய்கள்






- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்

- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்



நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்

சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்

அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் கொரோனா போரில் வெற்றிபெற முடியும்

இந்தியா வரலாற்றில் இல்லாத அளவுக்கு பெரும் பொருளாதார சரிவை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. 130 கோடி மக்கள் கொண்ட நம்நாட்டில் வேலை இல்லா திண்டாட்டம், உற்பத்தியின்மை காரணமாக பெரும் சரிவை சந்தித்து வந்த நிலையில் கொரோனா ஒட்டுமொத்தமாக உருக் குலைத்து போட்டு இருக்கிறது. இந்திய பொருளாதார வரலாற்றில் 1958, 1966, 1980ம் ஆண்டுகளில் பொருளாதார ஜிடிபி வளர்ச்சி கடும் சரிவை சந்தித்தது. அதற்கு காரணம் பருவமழை பொய்த்தது தான். ஆனால் இன்றைய சரிவுக்கு கொரோனா ஊரடங்கு மட்டுமே காரணம் என்று சொல்லி விட முடியாது. ஊரடங்கும் ஒரு பெரும் காரணம் என்ற நிலையில் தான் இருக்கிறது.

ஏனெனில் விவசாய உற்பத்தி இந்த ஊரடங்கு நேரத்திலும் எதிர்பார்த்ததை விட உச்சத்தை எட்டியிருக்கிறது. அதனால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு கூடியிருக்கிறது. ஆனால் விவசாயம் அல்லாத உற்பத்தி வளர்ச்சி இந்த காலாண்டில் 6 சதவீதம் சரிந்து இருக்கிறது. இதனால் இந்த காலாண்டில் ஒட்டு மொத்த ஜிடிபி வளர்ச்சி குறியீடு கடுமையாக



சரியும் என்று தெரிகிறது. குறிப்பாக 25 சதவீதம் சரிந்து விடும் என்பதால் இனிவரும் காலங்கள் மிகப்பெரிய போர்க்களம்தான். இந்திய பொருளாதாரத்தின் பலமே மாநிலங்களின் பங்களிப்பு தான். இன்று அது உடைக்கப்பட்டு இருக்கிறது. ஜிஎஸ்டி வரி மூலம் ஒட்டுமொத்த பொருளாதார கட்டுப்பாட்டையும் தன்கையில் வைத்திருந்த மத்திய அரசின் மமதை கொரோனா தாக்குதல் முன் கடுமையாக தோல்வியை சந்தித்து இருக்கிறது.

மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய வரிவருவாய் பங்களிப்பு கூட இன்று வரை முறைப்படி கொடுக்க முடியவில்லை. பங்களிப்பை சரியாக பங்கிட தெரியவில்லை. அதனால் பல்லைக்கடித்துக்கொண்டு மத்திய அரசு தரும் பணத்திற்காக காத்துக்கிடக்கின்றன மாநில அரசுகள். தட்டிக்கேட்கவும் வழிதெரியவில்லை. ஒட்டுமொத்த அதிகார பலத்தை கையில் எடுத்தாலும் மத்திய அரசு பொருளாதாரத்தை மீட்டெடுக்க மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வர வழி தெரியாமல் திண்டாடுகிறது. எளிதாக சொல்லப்போனால் பணப் புழக்கம் இல்லாத நிலை இன்று உருவாகி மக்களிடையே மனப்புழுக்கம் ஏற்பட்ட இருக்கிறது.

கொரோனா தாக்குதல் ஒருபுறம், பொருளாதார சரிவு மறுபுறம் என்று இருமுனை தாக்குதலில் வேலையிழப்பு இன்னும் அதிகரித்து இருக்கிறது. 60 நாள் கடந்தும் நீடிக்கும் கொரோனா ஊரடங்கால் அச்சம் அடைந்த வெளிமாநில தொழிலாளர்கள் நடைபயணமாக சொந்த ஊர் நோக்கி செல்லும் அவலம் நீடித்துக்கொண்டு இருக்கிறது. இந்த நேரத்தில் அனைவர் மனதிலும் அவநம்பிக்கை மட்டுமே தொற்றி நிற்கிறது. இப்போது தேவை நம்பிக்கை. அதை பிரதமர் மோடியால் மட்டுமே விதைக்க முடியும். அதற்கு ₹20 லட்சம் கோடி போன்ற பசப்பு வார்த் தைகள் உதவாது. உண்மை, யதார்த்தம், கடும் உழைப்புதான் சரிந்து நிற்கும் பொருளாதாரத்தை எழுந்து நிமர வைக்கும். அதற்கு ஒட்டுமொத்த தேசமும் ஒத்துழைப்பது அவசியம்.

**- ஆசிரியர்**



# மருத்துவக் கருவிகளை வாங்குவதற்கு முன்னுரிமை

ஜூன் 2020 வரையிலான காலத்திற்கு 75000 வென்டிலேட்டர்கள் செயற்கை சுவாசக்கருவிகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரக் குடும்ப நலத்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. தற்போது இருப்பில் உள்ள எண்ணிக்கை 19,398 கருவிகள். கருவிகளை வாங்கும் முகமையான, மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் செயல்படும், பொதுத்துறை நிறுவனமான ஹெச் எல் எல் லைஃப் கேர் நிறுவனம் (HLL Lifecare) ணிநி யின் உத்தரவின் பேரில், 60,884 செயற்கை சுவாசக் கருவிகளுக்கு ஆர்டர் கொடுத்துள்ளது. இதுவரை கொடுக்கப்பட்ட மொத்த ஆர்டர்களில் 59,884 செயற்கை சுவாசக் கருவிகள், உள்நாட்டு உற்பத்தியாளர் களிடமிருந்து பெறப்படும். ஆயிரம் செயற்கை சுவாசக்கருவிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

பிராண வாயு மற்றும் பிராணவாயு சிலிண்டர்களை பொறுத்தவரை, நாடு தன்னிறைவடைந்துள்ளது. ஆக்சிஜன் தயாரிப் பதற்கான மொத்த உற்பத்தித் திறன் 6400MT. இதில் சுமார் 1000MT மருத்துவ பிராணவாயுவிற்காக பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் பிராணவாயு தயாரிக்கின்ற, 5 பெரிய நிறுவனங்களும், 600 சிறு உற்பத்தியாளர்களும் உள்ளன. சுமார் 450 மருத்துவமனைகளில், அவர்களே உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய பிராணவாயு உற்பத்தி முறை உள்ளது. நாட்டில் சுமார் 1050 கிரையோஜெனிக் டேங்கர்கள் உள்ளன.

வழங்கப்படக் கூடிய வகையிலான, சுமார் 4.38 இலட்சம் மருத்துவப் பிராணவாயு சிலிண்டர்கள் உள்ளன. மேலும் 1.03 இலட்சம் புதிய மருத்துவ பிராணவாயு சிலிண்டர்களுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தொழில் துறைக்கான சுமார் 5 இலட்சம் பிராண வாயு சிலிண்டர்களையும் தேவைப்பட்டால் மாற்றுவதற்காக கண்டறியப்பட்டுள்ளன. ஏற்கனவே 60,000 சிலிண்டர்களை மாற்றுவதற்கான ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுவிட்டன.

ஜூன் 2020 வரையிலான காலத்திற்கு, சுமார் 2.01 கோடி ரூபாய் மதிப்பிலான தனிநபர் பாதுகாப்புக் கவச உபகரணங்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து 2.22 கோடி ரூபாய் மதிப்பிலான தனி நபர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆர்டர்கள்

கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 1.42 கோடி ரூபாய் மதிப்பிலான உபகரணங்களுக்கான ஆர்டர்கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான தனிநபர் பாதுகாப்புக் கவசங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

ஜூன் 2020 வரையிலான காலத்திற்கு 2.72 கோடி ரூபாய் மதிப்பிலான ழி 95 முகக்கவசங்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து 2.49 கோடி ரூபாய் மதிப்பிலான முகக்கவசங்களுக்கு ஏற்கனவே ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. இவற்றுள் 1.49 கோடி ரூபாய் மதிப்பிலான முகக்கவசங்களுக்கான ஆர்டர்கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான N 95 முகக்கவசங்களுக்கான ஆர்டர்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இதுவரை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) நாளொன்றுக்கு 70 ஆயிரம் சோதனைகளை நடத்தும், சோதனை அளவை எட்டியுள்ளது. இதுவரை 9 வீலட்சம் சோதனைகளுக்கும் மேல் நடத்தப்பட்டுள்ளன.

மனித சக்தியால் இயங்கக்கூடிய RT PCR உபகரணங்கள் சுமார் 35 இலட்சம் தேவைப்படும், என்று DHR மதிப்பீடு செய்துள்ளது. அதனடிப்படையில் Probe, Primer, Master-mix ஆகியவற்றுக்கு ஆர்டர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இதுநாள் வரை 16.4 இலட்சம் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான பொருள்கள் வரப்பெற்றுள்ளன

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி மற்றும் வழங்குதல், தொடர்ந்து நடைபெறுவதைக் கண்காணிப்பதற்காக, இரண்டு கட்டுப்பாட்டு அறைகள் - மருந்தாளுமைத் துறையில் ஒன்றும், தேசிய மருந்தாளுமை விலை அமைப்பில் ஒன்றும் - என இரண்டு கட்டுப்பாட்டு அறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. (Department of Pharmaceuticals (DoP) and National Pharmaceuticals Pricing Authority (NPPA))

– V. அருணாச்சலம்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-09 இதழ்-01 ஜூன் - 2020



**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்: **வீ.சிவசங்கர்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்
V.தாயுமானவன்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
S.செந்தில்குமார், குருபாலகிருஷ்ணன், R.ஜெயா சென்னை
A.D.ராஜேந்திரன் விழுப்புரம், S.மோகன்
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், B.நாராயணசாமி, C. அன்பழகன்
G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், R. சத்தியமூர்த்தி
M.முருகன், M.சரவணன்


சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321



# கொரோனா வைரஸ் அச்சங்களுக்கு நடுவில் உங்கள் மனநலத்தை பாதுகாப்பது எப்படி?

கொரோனா வைரஸ் உலகையே நிச்சயமற்ற நிலைக்கு தள்ளியுள்ளது. மேலும் கொரோனா தொற்று பரவும் செய்திகள் நம்மிடம் இடைவெளி இல்லாமல் வந்து சேர்கிறது.

இதனால் இயல்பாகவே பதற்றம் அடைபவர்கள் மற்றும் ஒரே செயலை பலமுறை செய்ய தூண்டும் ஓ.சி.டி (Obsessive-compulsive disorder) எனப்படும் மனநோய் உள்ளவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

**செய்திகள் மற்றும் கொரோனா குறித்து படிப்பதை கட்டுப்படுத்துங்கள்:** கொரோனா வைரஸ் குறித்து தினமும் கேட்கும் செய்திகள் நமக்கு கவலை அளிப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஏற்கனவே மனதளவில் பாதிக்கப்பட்டவர்களை இந்த செய்திகள் இன்னும் அதிகம் பாதிப்படைய செய்யும்.

கொரோனா வைரஸ் தாக்கம் பரவ தொடங்கியபோது உலக சுகாதார நிறுவனம் மன நிலையை பாதுகாப்பது குறித்த ஆலோசனைகளை வழங்கியது. இந்த ஆலோசனைகள் சமூக வலைதளத்தில் அதிகம் வரவேற்கப்பட்டன.

பதற்றம் அடைபவர்கள் குறித்து பிரிட்டனின் நிக்கி லிட்பெட்டர் கூறுகையில், ''கட்டுப்பாட்டை மீறி நிலைமை மோசமடையும்போது ஏற்படும் அச்சம், நிச்சயமற்ற தன்மையை பொறுத்துக் கொள்ளமுடியாமல் ஏற்படும் கவலை, இவை இரண்டும்தான் நாம் பதற்றம் அடைய காரணமாக உள்ளது'' என்கிறார். எனவே இயல்பாகவே பதற்றத்துடன் இருக்கும் நபர்களுக்கு இந்த சூழ்நிலையை எதிர்கொள்வது மிகப் பெரிய சவாலாக இருக்கும் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது,'' என்கிறார்.

''நாம் அறியாத பல விஷயங்கள் குறித்துதான் பொதுவாகப் பதற்றம் ஏற்படும். ஏதாவது நடந்து விடுமோ என்ற உணர்வில்தான் பதற்றம் வேரூன்றி இருக்கிறது,'' என்கிறார் மனநிலைக்கான அறக் கட்டளை ஒன்றின் செயற்பாட்டாளர் ரோஸி.

செய்திகளைப் படிக்கும்போது கவனம் தேவை. கேண்டிலில் வசிக்கும் இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான நிக், கொரோனா வைரஸ் குறித்து அதிக செய்திகளைப் படிப்பதே கவலை அளிக்கிறது என்கிறார். ''நான் கவலை அடையும்போது, என் எண்ணங்கள் கட்டுப்பாட்டை மீறி, பேரழிவின் விளைவுகள் மீது செல்லத் தொடங்கியது,'' என கூறுகிறார். மேலும் தனது பெற்றோர்கள் மற்றும் தனக்குத் தெரிந்த முதியவர்களின் நிலை குறித்தும் கவலையாக இருக்கிறது என்கிறார்.

''பொதுவாக கவலையில் இருந்தால், அந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்வேன். ஆனால் தற்போது அப்படி செய்ய முடியவில்லை,'' என்கிறார்.

இணையத்தில் செய்திகளைப் படிப்பது மற்றும் சமூக ஊடகம் ஆகியவற்றில் இருந்து விலகி இருப்பது உள்ளிட்ட சில அறிவுரைகளை நிக் கடைபிடித்ததால், தான் தற்போது நல்ல மனநிலையில் இருப்பதாக தெரிவிக்கிறார்.

உங்களை பாதிக்கக்கூடிய செய்திகளை காண்பதையும் படிப்பதையும் தவிருங்கள். மாறாக அடிப்படை செய்திகளை அறிய குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி அந்த நேரத்தில் மட்டும் செய்திகளை கவனியுங்கள். நிறைய தவறான தகவல்கள் மற்றும் வதந்திகள் பரவிவருகின்றன. எனவே சரியான செய்திகளை ஒளிப்பரப்பும் ஊடகம் அல்லது அரசாங்கம் வெளியிடும் தகவல்களை மட்டும் நம்புங்கள். சமூக ஊடகத்தில் இருந்து விலகி இருங்கள்.



**சமூக வலைத்தளம் அதிகம் வேண்டாம்:** மான்செஸ்டரில் வசிக்கும் அலிசன், ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் குறித்த அனைத்து செய்திகளையும் படித்து தொடர்ந்து தனது ட்விட்டர் பக்கத்தில் கொரோனா வைரஸ் தொடர்பாக இருந்த எல்லா ஹாஷ்டேகுகளையும் பின் தொடர்ந்துள்ளார். ஆனால் நாளடைவில் இதனால் மனம் வருந்தி பல முறை அழுததாக கூறுகிறார்.

எனவே தற்போது சமூக ஊடகத்தில் அதிக நேரம் செலவிடாமல், விலகி இருப்பதாகவும், தமக்கு கவலை அளிக்கும் எந்த செய்திகளையும் பார்ப்பதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

கொரோனா வைரஸ் குறித்து அடிக்கடி தகவல்களை வெளியிடும் வாட்ஸ் ஆப் குருப்புகளை மியூட் செய்யவும். பேஸ்புக்கில் உங்கள் மனதை காயப்படுத்தும் பதிவுகளை ஹைட் செய்யுங்கள். கை கழுவுங்கள் - ஆனால் அடிக்கடி வேண்டாம். கைகளை கழுவுங்கள், ஆனால் அதீதமாக அல்ல

ஓ.சி.டி எனப்படும் ஒரு செயலை பலமுறை செய்ய தூண்டும் மனநோய்க்கு ஆளாகி, தேவையான ஆலோசனைகள் பெற்று தங்களை மாற்றிக்கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தவர்களுக்கு தற்போது குழப்பம் நிலவுகிறது.

குறிப்பாக ஓ.சி.டி யால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவகையினர் அடிக்கடி கை கழுவும் பழக்கத்தை மேற்கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் அடிக்கடி கை கழுவும் பழக்கத்தை தவிர்க்கும் முயற்சியில் டுபட்டிருப்பார்கள். ஆனால் இந்த கொரோனா வைரஸ் பாதிப்பால் அவர்களுக்குள் தற்போது குழப்பம் நிலவும்.

மேலும் கொரோனா வைரஸ் பாதிப்பை தவிர்க்க தற்போது அவர்கள் மீண்டும் சோப் மற்றும் சானிடைசர் பயன்படுத்த ஆரம்பித்தால், பிறகு மீண்டும் அந்த பழக்கத்தில் இருந்து விடுபடுவது சவாலாக இருக்கும்.

எந்த வகையான ஓ.சி.டி யால் பாதிக்கப் பட்டவர்களாக இருந்தாலும் ஒரு கட்டத்தில் தங்களை திசைத்திருப்பி கொள்ள வெளியில் செல்வார்கள். ஆனால் தற்போது அவர்களை திசைத்திருப்பிக்கொள்ளவும் வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

**நண்பர்களுடன் பேசுங்கள்:** கொரோனா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்து வரும் இந்த சூழலில் பலர் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் நேரலாம். எனவே இந்த நேரத்தில் நீங்கள் அக்கறைகொள்ளும் அனைத்து நண்பர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரியை கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள். அவர்களுடன் உரையாட நேரம் ஒதுக்குங்கள்.

நீங்கள் தனிமைப்பட்டிருந்தால் உங்களுக்கென சில வேலைகளை பட்டியலிட்டு கொள்ளுங்கள்.

ஒவ்வொருநாளும் வெவ்வேறு பணிகளில் ஈடுபடுங்கள். இதனால் இறுதியில் உங்கள் தனிமையான நாட்களை நீங்கள் சரியாகப் பயன்படுத்தினீர்கள் என்ற நிறைவு ஏற்படும்.

**உங்கள் மனம் இயற்கையை அணுகட்டும்:** இயற்கையையும் சூரிய ஒளியையும் முடிந்தவரை உங்கள் மனம் அணுகட்டும். நல்ல உணவு உண்ணுங்கள், நிறைய தண்ணீர் குடிங்கள், நல்ல உடற்பயிற்சி செய்யுங்கள்.

* நீங்கள் சாதாரணமாக செயல்படுவதைப் போல செயல்பட வேண்டாம். சிறிதும் எதிர்வினையாற்றவேண்டாம். அமைதி காக்கவும்.
* நீங்கள் நினைக்கும் அனைத்தும் சரி தான் என்று நம்பாதீர்கள். அது வெறும் உணர்வோ, யோசனையோ மட்டும் தான்.
* உங்கள் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் எதிர்வினையாற்றத் தேவையில்லை.
* இந்த தருணத்தை பற்றி மட்டும் சிந்தியுங்கள். ஏனென்றால் இந்த தருணம் நன்றாகத்தான் உள்ளது.

- ***வீ. சிவசங்கர்***

முனைவர் ஆ.மவுரியன்






தொடர் 31

# டாக்டர் தருமாம்பாள்

**"வாழ வழி தெரியாமல் வாடிய பெண்களுக்கு கல்வி கற்கவும் கற்ற பின் நல்ல வேலைகள் பெறவும் ஏழைகளுக்கு உதவி செய்தார். விதவைகளுக்கு மறுமணம் செய்து வைத்தார். சாதி மறுப்புத் திருமணங்களும் செய்து வைத்தார்".**

தருமாம்பாள் மருத்துவத்தோடு நிற்காமல் இந்தி எதிர்ப்புப் போராட்டம், தமிழிசை இயக்கம், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்கள் உயர்வு, விதவை மறுமணம், கலப்பு மணம், பெண் கல்வி என்று பல தரப்பட்ட பொதுத்தொண்டில் ஈடுபாட்டுடன் செயல்படத் தொடங்கினார். நோய்க்காக மட்டும் தேடி வராமல் பல பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகவும் இவரைத் தேடி பலர் வரத் தொடங்கினர். நேரடியாக அவரே தலையிட்டு பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்கத் தொடங்கினார். இதனால் அவரது புகழ் பரவத் தொடங்கியது. இவரது பொது நலத் தொண்டைப் பாராட்டி வீரத் தமிழன்னை என்ற பட்டம் ஒரு விழாவில் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களால் வழங்கப்பட்டது (1951).

"தந்தை பெரியாரின்" கருத்துக்களால் கவரப்பட்ட தருமாம்பாள் அவரைப் போலவே விதவைத் திருமணம், கலப்பு மணம் ஆகியவற்றைத் துணிச்சலாக நடத்தி வைத்தார். வேலை கேட்டு வரும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்து, அவர்களுக்கு விதவைகளைத் திருமணம் செய்து வைத்தார். எந்த ஒரு பிரச்னை என்றாலும் தருமாம்பாளிடம் சென்றால் நல்ல தீர்வு கிடைக்கும் என்று நம்பி மக்கள் அவரைத் தேடி வரத் தொடங்கிவிட்டனர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறைத்தண்டனை பெற்றார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியோடு இணைந்து மக்கள் முன்னேற்றப் பணிக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தருமாம்பாளுக்கு இருந்த செல்வாக்கிற்கு அவர் எவ்வளவோ வசதியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் பொருளாசை அற்றவராக இருந்தார். தமது வீட்டை மகளிர் சரணாலயமாகவே மாற்றியிருந்தார். கணவனால் கைவிடப்பட்ட பெண்களை மீண்டும் அவரவர் கணவர்களோடு சேர்ந்து வாழ வைத்திருக்கிறார்.

ஏராளமான பெண்களுக்குக் கலப்புத் திருமணம் செய்து வைத்தார். படிக்க வசதியற்ற பெண்கள் கல்வி பயில செல்வந்தர்களை உதவ வைத்திருக்கிறார். ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தார்.

தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழ் அறிஞர்களுக்காகவும் தருமாம்பாள் பல வழிகளில் உதவியுள்ளார். கருந்தட்டான் குடியில் இருந்த தனது வீட்டை கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

தமிழாசிரியர்களுக்கு சம்பளம் கூட்டவில்லை என்றால், பெண்களை எல்லாம் ஒன்று கூட்டி, 'இழவு வாரம்' கொண்டாடுவோம்'' என்று அரசுக்கே எச்சரிக்கை விடுத்தார்

**1951**ல் திரு.வி.க. தலைமையில் நடந்த மணி விழாவில் தமிழறிஞர் டாக்டர். அ.சிதம்பரநாதன் செட்டியார் "வீரத்தமிழன்னை" என்ற பட்டத்தை வழங்கினார்.

வீரத் தமிழன்னை பட்டம் பெற்ற தருமாம்பாள்தான் ஈ.வெ. ராமசாமி நாயக்கருக்கு 'பெரியார்' என்ற பட்டத்தையும், தியாகராஜ பாகவதருக்கு 'ஏழிசை மன்னர்' என்ற பட்டத்தையும், எம்.எம். தண்டபாணி தேசிகருக்கு 'இசையரசு' பட்டத்தையும் வழங்கினார்

மக்கள் தொண்டு ஒன்றை மட்டுமே தன் இறுதி மூச்சுவரை கொண்டு போராடி வெற்றி கண்ட இந்த வீரமங்கையின் மூச்சு **1959** ம் ஆண்டு தனது **69**ஆவது வயதில் நின்று போனது. பெரும் பதவிகளை விரும்பாமல்,




பண வசதி ஏதுமின்றி அம்மையார் செய்த பல மக்கள் பணிகள் பதிவு செய்யப்படாமலேயே போய்விட்டது.

மருத்துவர் தருமாம்பாள் நினைவைப் போற்றும் வகையில் விதவைகளின் மறுவாழ்விற்காக டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை திருமண உதவித் திட்டம் என்னும் பெயரில் தமிழ்நாடு அரசு உதவி செய்து வருகிறது.

இவரது நினைவைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு கரந்தையில் டிக்டர் தருமாம்மாள் அரசு பலதொழில் நுட்பக் கல்லூரி நடத்தி வருகிறது. சென்னை மாநகராட்சி இவர் பெயரில் ஒரு பூங்காவைப் பராமரித்து வருகிறது.

**தொடரும்**

# e-NAM என்ற இணைய தளம் மூலம் வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்ய ஒருங்கிணைப்பு

மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் திரு.நரேந்திர சிங் தோமர், 2020 மே மாதத்திற்குள் வேளாண் விளைபொருள்களை இணையத்தின் மூலம் விற்பனை செய்வதற்கான e-NAM தளத்தில் சுமார் ஆயிரம் மண்டிகள் சேரும் என்று தெரிவித்துள்ளார். இன்று கிருஷி பவனில் நடந்த ஒரு விழாவில் அவர் பேசிய போது, அங்கு ஏழு மாநிலங்களில் இருந்து 200 புதிய மண்டிகள் இ-நாம் இணைய தளத்தில் சேர்க்கப்பட்டன. அப்போது அமைச்சர் நிலக்கடலை மற்றும் மக்காச்சோளத்தை கர்னூல், ஹூப்ளியில் இருந்த மண்டிகளுக்கு இடையில் வீடியோ மாநாடு மூலம் நேரடி வர்த்தகத்தைத் துவக்கி வைத்தார். விவசாயிகளின் நலனுக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பான பிரதமரின் நோக்கம் விரைவில் நிறைவேறும் என்றார்.

இன்று இ-நாம் தளத்துடன் ஒருங்கிணைந்த 200 சந்தைகள் பின்வருமாறு: ஆந்திரா (11 மண்டிகள்), குஜராத் (25 மண்டிகள்), ஒடிசா (16 மண்டிகள்), ராஜஸ்தான் (94 மண்டிகள்), தமிழ்நாடு (27 மண்டிகள்), உத்தரப்பிரதேசம் (25 மண்டிகள்), கர்நாடகா (02 மண்டிகள்). இது நாட்டின் மொத்த இ-நாம் மண்டிகளை 785 ஆகக் கொண்டுவரும். நாடு முழுவதும் 415 புதிய சந்தைகளை ஒருங்கிணைக்கும் பாதையில் அடைந்த முதல் மைல் கல் இதுவாகும். இ-நாம் மாநிலங்களின் பட்டியலில் கர்நாடக மாநிலம் சேர்க்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

கடைக்கோடி விவசாயியை அடைவதற்கும், அவர்கள் வேளாண் விளைபொருள்களை விற்கும் முறையை மாற்றுவதற்கும் உதவி வரும் இந்தப் புதிய மண்டிகள் அதிகமான விவசாயிகளையும், வர்த்தகர்களையும் சென்றடைவதன் மூலம் இ-நாம் அதிக வலுப்பெற்றுள்ளது. ஏற்கனவே 16 மாநிலங்கள்




மற்றும் 02 யூனியன் பிரதேசங்களில் 585 மண்டிகள் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

கர்நாடக மாநில வேளாண் சந்தைப்படுத்தல் வாரியத்தால் ஊக்குவிக்கப்பட்ட மின் வர்த்தக தளமான கர்நாடகாவின் ராஷ்டிரிய மின் சந்தைச் சேவைகளின் (ReMS), ஒருங்கிணைந்த சந்தைத்தளத்துடன் (UMP) இன்று முதல் இ-நாம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ஒற்றை உள்நுழைவுக் கட்டமைப்பைப் பயன் படுத்துவதன் மூலம் இரு தளங்களிலும் உள்ள வர்த்தகர்கள் இரு தளங்களிலும் தடையற்ற வர்த்தகத்தை செயல்படுத்த இது உதவும்.

இந்தியாவில் முதல்முறையாக இந்த அளவிலான வேளாண் பொருள்களுக்கான இரண்டு வெவ்வேறு மின்-வர்த்தகத் தளங்கள் இயங்கக் கூடியதாக மாற்றப்படும். இது கர்நாடகாவின் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை இ-நாமில் பதிவு செய்துள்ள ஏராளமான வர்த்தகர்களுக்கு விற்க உதவும், மேலும் பிற மாநிலங்களில் உள்ள




இ-நாம் மண்டிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூட கர்நாடகாவின் ReMS தளத்துடன் பதிவு செய்யப்பட்ட கர்நாடக வர்த்தகர்களுக்கு தங்களது விளைபொருள்களை விற்க முடியும். இது கர்நாடகா மற்றும் இ-நாம் தளத்தில் இணைந்துள்ள மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்தை ஊக்குவிக்கும்.

*1.66* கோடி விவசாயிகள் மற்றும் *1.28* இலட்சம் வர்த்தகர்கள் இ-நாம் மேடையில் பதிவு செய்துள்ளதால் இ-நாம் வெகு தூரம் வரை கடந்து வந்துள்ளது. ஏப்ரல் *30, 2020* நிலவரப்படி, மொத்த வர்த்தக அளவு *3.41* கோடி மெட்ரிக் டன் மற்றும் *37* இலட்சம் எண்ணிக்கையில் (மூங்கில் மற்றும் தேங்காய்) மொத்தமாக சுமார் *1.0* இலட்சம் கோடி ரூபாய் இ-நாம் மேடையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வேளாண் துறையில் பழைய பாதையை தகர்த்தெறிந்து புதிய புரட்சிகரப் பாதையை உருவாக்கியதன் மூலம், இ-நாம் ஆன்லைன் தளம் இந்தியாவில் விவசாய சந்தையை சீர்திருத்துவதில் ஒரு பெரிய பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளது.

e-NAM மண்டி / மாநில எல்லைகளுக்கு அப்பால் வர்த்தகத்தை எளிதாக்குகிறது. *12* மாநிலங்களுக்குள் மொத்தம் *233* மண்டிகள் இடை வர்த்தகத்தில் பங்கேற்றுள்ளன, அதே போல *13* மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள், இ-நாம் மேடையில் மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகத்தில் பங்கேற்றுள்ளதுடன், விவசாயிகள் தொலைதூரத்தில் அமைந்துள்ள வர்த்தகர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்வதற்கும் இது வகை செய்கிறது. தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட உணவுகளைப் பதப்படுத்தும் நிறுவனங்கள் (திறிளிவ) இ-நாம் இணையதளத்தில் களம் இறங்கியுள்ளன.

கூடுதலாக, கொவிட்-*19* நிலைமையைச் சமாளிக்க அமைச்சகம் கடந்த மாதம் இ-நாமில் இரண்டு முக்கிய முறைகளை அறிமுகப்படுத்தியது, இதனால் விவசாயிகள் தங்கள் தயாரிப்புகளை மண்டிக்குக் கொண்டு வராமலேயே விற்க முடியும். இந்த முறைகள் பின் வருமாறு: உணவு பதப்படுத்தும் நிறுவனத்தின் (FPO) விவசாய உறுப்பினர்கள் தங்கள் சேகரிப்பு மையத்திலிருந்து வர்த்தகம் செய்ய அந்த நிறுவனம் உதவும். மற்றொன்று சேமிப்புக் கிடங்கு மூலம். இதன் துணை கொண்டு விவசாயிகள் தங்கள் சேமித்து வைத்திருக்கும் பொருள்களைக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் (WDRA) பதிவு செய்யப்பட்ட கிடங்குகளில் விற்க முடியும், இது மாநிலங்களால் மண்டி எனக் கருதப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

கூடுதலாக, அமைச்சகம் சமீபத்தில் "கிசான் ராத்" மொபைல் பயன்பாட்டை அறிமுகப் படுத்தியுள்ளது, இது விவசாயிகள் தங்கள் சரக்குகளை அருகே உள்ள மண்டி அல்லது சேமிப்புக் கிடங்குகளுக்கு ஏற்றிச் செல்லப் பொருத்தமான போக்குவரத்து வாகனங்கள் / டிராக்டரைக் கண்டுபிடிப்பதற்கு உதவுகிறது.

- K. **ரமேஷ்குமார்**

# டிஜிட்டல் இந்தியா பிரச்சாரம் – பொது முடக்கச் சூழ்நிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது

கொவிட்-19 பரவல் காரணமாக அமல்படுத்தப்பட்டுள்ள தேசிய பொது முடக்கத்தின் போது, டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் பலன்களை இந்த நெருக்கடி நேரத்தில் பெற்றுக் கொள்ளும் விதமாக, உலகெங்கும் நடந்து வரும் அனைத்து நிகழ்வுகளைப் பற்றிய தகவல்களையும், செய்திகளையும் தெரிந்து கொள்ள முக்கிய ஆதாரமாக டிஜிட்டல் தளங்கள் விளங்குகின்றன. வழக்கமான முறைகளுடன் சேர்த்து, குறிப்பாக டிவிட்டர் போன்ற டிஜிட்டல் தளங்களை தகவல்களை விரைவில் சென்றடைய செய்யும் வழியாக மத்திய மற்றும் மாநில அரசுகளும் கருதுகின்றன. அனைத்து மத்திய அமைச்சகங்களும் அதிகாரப்பூர்வ சுட்டுரை (Twitter) முகவரிகளை வைத்துள்ள நிலையில், தங்களது அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் முக்கிய முடிவுகள் மற்றும் இதர தகவல்களை அறிவிக்க இந்தத் தளத்தை அவை தொடர்ந்து பயன்படுத்துகின்றன.

தவறான தகவல்களைத் தடுத்து கொவிட்-19ஐ கட்டுப்படுத்தத் தேவையான விஷயங்களைக் குறித்துத் தெளிவுப்படுத்தும் முயற்சியாக, நிபுணர்களால் கையாளப்படும் "@CovidIndiaSeva" என்னும் சுட்டுரை சேவை தளத்தை, கொவிட்-19 தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும் விதமாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் சமீபத்தில் தொடங்கி உள்ளது. மக்களிடம் ஒரு நேரடித் தொடர்பு அலைவரிசையை ஏற்படுத்தும் விதமாக, கொவிட்-19 தொடர்பான உண்மையான பொது சுகாதாரத் தகவல்களை வேகமாக இவர்கள் பகிர்வார்கள்.

பொது மக்களின் கேள்விகளுக்கு சிறப்பான பதில்களை அளித்து மின்னணு ஆளுகையை நிகழ் நேரத்தில் அளிப்பது இந்த சுட்டுரை சேவை தளத்தின் நோக்கமாகும்.

கோயம்புத்தூரில் உள்ள சூலூரைச் சேர்ந்த பேராசிரியர் ராஜேஷ், @CovidIndiaSeva சுட்டுரை கையாளுகைக்காக அரசுக்கு நன்றி தெரிவிக்கிறார். கேள்விகளுக்கு நிபுணர்கள் பதிலளிப்பதால், டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் இது ஒரு பயனுள்ள முயற்சி என்று கூறுகிறார்.

தன்னுடைய கேள்விகளுக்கு விடை கிடைத்ததால் கோயம்புத்தூரில் உள்ள மலுமிச்சம்பட்டியை சேர்ந்த பேராசிரியர் வீராசாமி இந்த முயற்சியை பாராட்டுகிறார்.

மேம்படுத்தப்பட்ட ஆன்லைன் உள்கட்டமைப்பு மூலமும், அதிகமாகி வரும் இணையத்






தொடர்பு மூலமும் அல்லது தொழில்நுட்பத் தளத்தில் நாட்டை டிஜிட்டலாக மேம்படுத்துவதன் மூலமும் மக்களுக்கு மின்னணு வழியாக அரசு சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய, இந்திய அரசால் டிஜிட்டல் இந்தியா பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடியால் *1* ஜூலை, *2015* அன்று இது தொடங்கப்பட்டது. பாரத்நெட் மூலம் பயனாளிகளுக்கு ஊக்கமும் அதிகாரமும் அளிக்கிறது.

அதிவேக இணைய வலைப்பின்னல்கள் மூலம் ஊரகப் பகுதிகளை இணைக்கும் முயற்சிகள் இந்தத் திட்டத்தில் அடங்கும். பாதுகாப்பான மற்றும் நிலையான உள்கட்டமைப்பு, டிஜிட்டல் மூலம் சேவைகள் வழங்குவது மற்றும் உலகளாவிய டிஜிட்டல் வாழ்க்கைமுறை ஆகிய மூன்று முக்கிய கூறுகளை டிஜிட்டல் இந்தியா கொண்டுள்ளது. இதன் விளைவாக, டிவிட்டர், முகநூல் போன்ற சமூக ஊடகங்களை உபயோகிப்பது மக்கள் மத்தியில் கடந்த சில வருடங்களில் அதிகரித்துள்ளது. இந்தக் காரணங்களுக்காக, மக்களைச் சென்றடைவதற்கு அரசுகளால் இந்தத் தளங்கள் வெகுவாகப் பயன்படுத்தப்படும் வேளையில், இவற்றின் பயன்பாடு தற்போதைய கொவிட்-*19* பொது முடக்க சமயத்தில் நன்றாக உணரப்படுகிறது. கொவிட் பற்றிய பொது தகவல்கள் மற்றும் செய்திகளைத் தெரிந்து கொள்ள இவற்றை ஒரு சிறந்த கருவியாக மக்கள் பயன்படுத்துகின்றனர். மேலும், அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க ஒரு ஊடாடும் தளமாக அதிகாரப்பூர்வ @CovidIndiaSeva சுட்டுரை கையாளுகை விளங்குகிறது. டிஜிட்டல் இந்தியா திட்டம் இவ்வாறாக பொதுமக்களின் வாழ்க்கையை நமது நாட்டில் மாற்றியுள்ள வேளையில், உலகத்தின் எந்தப் பகுதியுடன் ஒப்பிடும் போதும் இணைய சமூகத்துக்கு அதிகம் பேரை ஈர்க்கும் விதத்தில், தோராயமாக *10* இலட்சம் தினசரி செயல்மிகு இணையப் பயனர்களை மாதம் தோறும் இந்தியா சேர்க்கிறது.

– S. **சுப்ரமணியன்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

## Cell : 93821 33334 / 044 - 48615321

**Email : writermouriyan@gmail.com**

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

**சீந்தில் கல்பம்:** சீந்தில் இலை வெற்றிலைப் போல பச்சை நிறமாக இருக்கும். பழம் சிவப்பாகவும் சிறியதாகவும் இருக்கும் இது மற்ற மரங்களின் மீது படர்ந்து வளரும் கொடியினத்தைச் சார்ந்தது.

சீந்திலின் கொடியிலிருந்து மெல்லிய விழுதுகள் தொங்கும். இக்கொடியின் இலை,கொடி,வேர், சமூலம் என் அனைத்து பாகங்களும் மருந்துவத்திற்கு பயன்படுகின்றது.

சீந்திலின் கொடியை அறுத்து விட்டாலும் இலைகள் வாடாமல் பசுமையாக இருக்கும். அதனால் இதற்கு "சாகா மூலிகை" என்ற பெயர் வந்தது.

சாதாரணமாக சீந்தில் கொடிக்கு கோடை காலத்தில் அதிக சத்து இருக்கும். மழை மற்றும் பனிக்காலங்களில் சத்து மிகவும் குறைந்து காணப்படும்.

**சீந்தில் இலை:** சீந்திலின் இலையை அனலில் வாட்டி, புண்கள் மீது தடவி வந்தால் புண்கள் விரைவில் குணமடையும். மேலும் இதன் இலையை அரைத்து கோடை காலங்களில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வெறும் வயிற்றில் காலை வேளையில் சாப்பிட்டு வர சர்க்கரை வியாதி குணமாகும்.

**சீந்தில் கொடி:** முற்றிய கொடி இளம் கொடியை விட நிறைய பலன்களைத் தரும். அதாவது முற்றிய கொடியில் கைப்பு தன்மை அதிகம் இருக்கும். முதிர்ந்த கொடியைக் கோடைகாலத்தில் சேகரிக்க வேண்டும். மற்ற காலங்களில் சேகரிக்கப்படுவதற்கு இக்குணம் நிறைந்திராது.

**நன்றாக முற்றிய சீந்தில் கொடி இடித்தது - 35 கிராம்**
**கொத்தமல்லி - 20 கிராம்**
**சுக்கு - 20 கிராம்,**
**அதிமதுரம், சோம்பு - தலா 10 கிராம்**



எடுத்து இடித்து எல்லாவற்றையும் சேர்த்து தண்ணீர் ஒரு லிட்டர் விட்டு கொதிக்க வைத்து கால் லிட்டராக சுண்ட வைத்து, வடிகட்டி காலை, மாலை இரு வேளை மூன்று நாட்கள் குடித்து வந்தால் அஜீரணம், வயிறு உப்புசம், நாட்பட்ட வாதம், பலக்குறைவு முதலியன குணமாகும்.

**சீந்தில் சர்க்கரை:** கோடைக்காலத்தில் முற்றிய சீந்தில் கொடியை இடித்து, அதில் 5 படி தண்ணீர் ஊற்றி நன்றாக பிசைந்து, ஒரு நாள் முழுவதும் வைத்து, அதை தெளிய வைத்து விடவும். பிறகு அந்த தெளிந்த நீரை, கீழே ஊற்றி விட்டு அடியில் உள்ளதை மட்டும் எடுத்து, தண்ணீரை விட்டு கலக்கித் தெளிய விட வேண்டும்.

இது போல் ஐந்தாறு தடைவ செய்து கடைசியாக திப்பிலை நீக்கி நீரை அசையாமல் வைத்து தெளிவினை இறுத்து காய வைத்து எடுத்தால் நமக்கு சீந்தில் சர்க்கரை கிடைக்கும்.

இந்த சீந்தில் சர்க்கரையை வாயில் வைத்தால் சுவை இல்லாமலிருக்கும். இதை மற்ற மருந்துகளுடன் அனுபானமாக கொடுக்கலாம். மேலும் இது கல்லீரல், நுரையீரல் மற்றும் மண்ணீரலுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

**சீந்தில் புகை:** உடல் மெலிந்து மிகவும் நலிவுடன் இருப்பவர்கள் சீந்தில் கொடியை தீயிலிட்டு அதிலிருந்து வரும் புகையை நுகர்ந்தால் உடல் பலத்தை பெறுவார்கள்

சீந்தில் கொடியிலிருந்து இலைகளைப் பிரித்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். உலர்ந்த இலைகளைப் பொடித்து வைத்துக்கொண்டு நீரில் கலந்து ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை இரண்டு வேளையும் குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும்.

சீந்தில் தண்டுகளைக் காய வைத்து ஒரு தேக்கரண்டி பொடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பொடியை நான்கு டம்ளர் நீர் விட்டு காய்ச்ச வேண்டும். ஒரு டம்ளர் அளவாக சுண்டிய பிறகு காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் பசியின்மை, வயிற்றுவலி, செரிமானமின்மை ஆகிய துன்பங்கள் விலகும். காய்ச்சலுக்கும் இது நல்ல மருந்து.

சீந்தில் கொடியை இடித்து குளிர் நீர் விட்டு ஊற வைக்க வேண்டும். மறுநாள் நன்றாகக் கடைந்து திப்பியை நீக்கிவிட்டு நீரை மட்டும் வெயிலில் வைத்திருந்தால் நீர் தெளிந்துவரும். அந்த தெளிந்த நீரை வடிகட்டிவிட்டு புதிதாக தண்ணீர் சேர்த்து கலக்கி வெயிலில் சுண்ட வைக்க வேண்டும். இப்படி பலமுறை செய்வதால் வெண்மையான மாவு போன்ற பொருள் நமக்குக் கிடைக்கும். இதுவே சீந்தில் சர்க்கரை எனப்படும். (இந்த சீந்தில் சர்க்கரை நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.)

இந்த சீந்தில் சர்க்கரையை ஒரு கிராம் முதல் நான்கு கிராம் வரையில் வாயிலிட்டு நீர் அருந்துவதால் கடும் ஜுரத்துக்கு பின் ஏற்படும் உடல் இளைப்பு, மண்ணீரல் வீக்கம், இருமல், மூர்ச்சை, வாந்தி, ஆஸ்துமா ஆகியன குணமாகும். மேலும் இதனால் நாட்பட்ட சிறுநீர்ப்பை நோய்களுக்கும் தீர்வு கிடைக்கும்.

சீந்தில் இலையை அனலில் இட்டு வாட்டி, இளஞ்சூட்டோடு புண்களின் மேல் போட்டுவர வீக்கம் கரைந்து வலி குறையும். புண்களும் ஆறிவிடும்.




சீந்தில் கொடி 35 கிராம் அளவு எடுத்து நசுக்கி அதனோடு கொத்தமல்லி, அதிமதுரப்பொடி வகைக்கு 4 கிராம் அளவு சேர்த்துக் கொள்ள வேண்டும். அதனோடு 300 மி.லி. நீர் சேர்த்து சோம்பு, பன்னீர் ரோஜாப்பூ ஆகியன தலா 10 கிராம் சேர்த்து இரண்டு டம்ளர் நீர்விட்டு ஒரு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு வடிகட்டி வைத்துக்கொண்டு 25 மி.லி. முதல் 50 மி.லி. வரை தினமும் காலையில் எடுத்துக் கொண்டால் வயிற்று உப்புசம், நாள்பட்ட செரிமானமின்மை, வயிற்றைப் பாதித்துத் துன்பம் செய்கிற பல்வேறு நோய்களும் விலகும்.

சீந்தில் கொடியோடு நெற்பொரி வகைக்கு 50 கிராம் அளவு எடுத்து சேர்த்து ஒரு லிட்டர் நீர் விட்டுக் காய்ச்சி, 150 மி.லி. ஆகச் சுண்டச் செய்து தினமும் இருவேளை 50 மி.லி. அளவு குடித்துவர மேகச்சூடு, நாவறட்சி நீங்கும். எந்த சிரமுமின்றி வீடுகளில் வளரக் கூடிய சீந்தில் எனும் அமிர்தத்தை நாமும் பயன்படுத்திக் கொள்வோம்!

மூட்டு வலிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியது. ரத்தத்தின் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தக் கூடியது. கல்லீரலைப் பலப்படுத்தக் கூடியது. உடல் தேற்றியாக விளங்குவது. காம உணர்வைத் தூண்டக் கூடியது. வயிற்றுக் கோளாறுகளை வேரறுக்கக் கூடியது என எண்ணற்ற மருத்துவப் பலன்களைக் கொண்டது சீந்தில் கொடி.

- தொடரும்



# கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு எதிரான செயல்பாட்டில் போராடுபவர்களுக்கு ராணுவத்தின் சார்பில் மரியாதை

ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தார். ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் எம்.எல். நரவனே, கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங், விமானப் படை தலைமைத் தளபதி ஏர் சீப் மார்ஷல் ஆர்.கே.எஸ். படாவ்ரியா ஆகியோரும் அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அலுவலர்களின் முயற்சிகளுக்கு தலைமைத் தளபதி நன்றி தெரிவித்துக் கொண்டதுடன், வரும் நாட்களில் தங்களுடைய ஆதரவு அவர்களுக்குத் தொடரும் என்று உறுதி அளித்தார்.

நோய்த் தொற்றைக் கையாள்வதில் இந்திய அரசு எடுத்து வரும் தீவிரமான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தரும் வகையில் அரசின் அறிவுறுத்தல்களை குடிமக்கள் தீவிரமாகப் பின்பற்றி வருவதற்கு அவர் பாராட்டு தெரிவித்தார். இந்த முயற்சிகள் காரணமாக, நோய்த் தாக்குதல் நிலை அதிகரிக்காமல் இருப்பதாகவும், உலக அளவில் பெரும்பாலான நாடுகளைவிட இந்தியாவில் நோய்க் கட்டுப்பாடு சிறந்த முறையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனாவை எதிர்த்துப் போராடும் வீரர்களுக்குத் துணையாக தாங்கள் இருப்பதை வெளிக்காட்டும் வகையில் மே 3 ஆம் தேதி சில செயல்பாடுகளை ராணுவத்தினர் மேற்கொள்ள இருப்பதாக தலைமைத் தளபதி கூறினார். ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீநகர் முதல் திருவனந்தபுரம் வரையிலும், திப்ரூகார் முதல் கச் வளைகுடா வரையிலும் ராணுவத்தின் போர் விமானங்கள் மற்றும் போக்குவரத்து விமானங்கள் பல நிகழ்வுகளில் பங்கேற்கும் என்று அவர் குறிப்பிட்டார். கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகள் மீது விமானப் படை ஹெலிகாப்டர்களில் இருந்து மலர்கள் தூவப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கடலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கடற்படையும், கடலோரக் காவல் படையும் கப்பல்களை அலங்கார வடிவில் நிறுத்தும் என்றும், ராணுவ இசைக் குழுக்கள் கோவிட் மருத்துவமனைகளுக்குச் சென்று, கொரோனா வீரர்களுக்கு தங்கள் நன்றியைத் தெரிவிக்கும் வகையில், வெளியில் நின்று இசைப்பார்கள் என்றும் தலைமைத் தளபதி கூறினார்.

**- இர்வீன்**

# கோவிட்-19 தொற்று பரவல் சூழலை கருத்தில் கொண்டு 49 வகையான வன சிறு உற்பத்தி பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, வனப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் 49 வகையான சிறு பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு இன்று மாற்றியமைத்துள்ளது. இது குறித்த உத்தரவை வெளியிட்டுள்ள பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம், மத்திய அரசின் பழங்குடியின விவகார அமைச் சகத்தின் கீழ் உள்ள விலைக் குழு, சிறு வனப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைப்பதை குறிப்பிட்டுள்ளது. எனினும், கோவிட்-19 தொற்று பரவலால் நாட்டில் தற்போது எழுந்துள்ள மிகவும்





நெருக்கடியான சூழல் மற்றும் மாறுபட்ட நிலையை கருத்தில் கொண்டும், பழங் குடியின வன சிறு பொருட்கள் தயாரிப்போ ருக்கு மிகவும் அவசியமான உதவியை வழங்குவதற்கான உடனடி திட்டம் இருப்பதாலும், திட்டத்தின் விதிமுறைகளில் நடைமுறையில் உள்ள வழிமுறைகளை தளர்த்த அதிகார வட்டாரங்கள் முடிவு செய்துள்ளன. இதன்படி, இந்தத் திட்டத் தின்கீழ் வரும், வன சிறு உற்பத்திப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை, வன சிறு பொருட்கள் விலைக் குழுவுடன் ஆலோசனை நடத்திய பிறகு, மாற்றியமைத்துள்ளது.

பல்வேறு வகையான வனப் சிறு பொருட்களின் ஆதார விலை 16 சதவீதம் முதல் 66 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஆதார விலை உயர்த்தப்பட்டதன்மூலம், குறைந்தது 20 மாநிலங்களில் வன சிறு பொருட்களை கொள்முதல் செய்வதற்கான உடனடி மற்றும் மிகவும் தேவையான சூழல் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**- குருதேவ்**

# சிந்தனை முத்துக்கள்
















முள் குத்தினாலும் கத்தும் நாம்,
டாக்டர் ஊசி போடும்போது மட்டும் தாங்கிக்குவோம்...

வலி என்னமோ ஒன்னுதான் ஏற்றுக் கொள்ள துணிந்துவிட்டால் வலிகளும்,வேதனைகளும் தூசிதான்...!






முழிச்சிக்கோ! பொழச்சிக்கோ!!

காலகளில் சக்கரம்! கைகளில் சூத்திரம்! எண்ணங்களோ சீக்கிரம் சீக்கிரம்!
அடங்காத காளையாய் ஓர் இயந்திரம்! இயற்கையை சிதைத்த சரித்திரம்!
பழுது பார்க்கிற மந்திரம்! விளைவோ ஊரடங்கு எனும் தந்திரம்!
கொரானாவிடம் பத்திரம்! பத்திரம்!!



























# கடினங்கள் நிறைந்த இந்த வருடத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விதைப்பதற்குத் தயாராகும் விவசாயிகள்

## இலட்சக்கணக்கான மண் வள அட்டைதாரார்கள் மண் பரிசோதனைக்குப் பதிவு செய்தனர்

கொவிட்-19 நோய்ப் பரவல் காரணமாக அமல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கம் நமது வேளாண் அலுவலர்களை எந்த விதத்திலும் தடுத்து நிறுத்திவிடவில்லை. மண் பரிசோதனை, உரம் வழங்கல் மற்றும் விவசாயிகளின் வேளாண் பொருள்களை சந்தைப்படுத்த உதவி செய்தல் போன்ற களப் பணிகளை செய்து விவசாயிகளுக்கு அவர்கள் தொடர்ந்து உதவி வருகின்றனர். தூய்மை மற்றும் மனித வாழ்வில் சுகாதாரத்தைப் பேணுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உலகெங்கும் கொவிட்-19 பெருந்தொற்று உணர்த்தியுள்ளது. வைரசைத் துரத்தியடிக்க, மக்களைப் பாதுகாப்பாகவும், சுகாதாரமாகவும் இருக்க அறிவுறுத்தும் அதே வேளையில், பொது முடக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு தானியங்கள், பருப்புகள், சமையல் எண்ணெய் வழங்குதல் மற்றும் பல்வேறு இதர நடவடிக்கைகள் மூலம் மத்திய, மாநில அரசுகள் உதவி வருகின்றன.

நாட்டுக்கு உணவு வழங்கும் விவசாயிகளின் பங்கை ஒரு போதும் குறைத்து மதிப்பிடக்கூடாது மற்றும் விவசாய நடவடிக்கைகளை எந்தச் சூழ்நிலையிலும் பாதிப்படைய விடக்கூடாது. நாட்டில் உள்ள 130 கோடி பேருக்கும் உணவளிக்க வேண்டுமென்றால் வேளாண் சமுதாயத்தின் வாழ்க்கை தொடர்ந்து நடைபெற வேண்டும். உரம் மற்றும் தண்ணீரின் உகந்த பயன்பாட்டோடு நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டுமென்றால், மனிதர்களின் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு மண் வளமும் முக்கியமாகும். மத்திய வேளாண் அமைச்சகத்தால் மண் வள அட்டை இந்தியாவில் 5 டிசம்பர், 2015 அன்று அமல்படுத்தப்பட்டது. பயிர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துகளைப்



பரிந்துரை செய்ய ஏதுவாக நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மண் வள அட்டை அளிப்பதே இதன் நோக்கமாகும்.

நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் (NPK) போன்ற முக்கியமான ஊட்டச்சத்துகள்; இரண்டாம் நிலை ஊட்டச்சத்துகள்; துத்தநாகம், இரும்பு, தாமிரம் மற்றும் இதர அளவுருக்கள் போன்ற சிறிய ஊட்டச்சத்துகள் போன்ற மண்ணின் 12 விஷயங்களைப் பற்றிய தகவல் சுருக்கத்தை விவசாயிக்கு மண் வள அட்டை வழங்குகிறது. நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் (NMSA) மண் வள அட்டை திட்டத்தின் கீழ் திருச்சியில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்தும் ஐந்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படும் என்று வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். உரங்களின் அதிகமான பயன்பாடு, மண் வள அட்டைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளத் தயார் நிலையில் உள்ள விவசாயிகள், விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் ஆகிய இரண்டையும் பெற்றுள்ள கிராமங்கள் மற்றும் மண்ணில் உள்ள பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மண் மாதிரிகள் தற்போது சேகரிக்கப்பட்டு வரும் நிலையில், மே 25இல் இந்தப் பணிகள் முடிவடையும்.

மண் மாதிரிகள் சோதிக்கப்பட்டு மானாவாரி சாகுபடிப் பருவத்துக்கு முன்னதாக மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் (NMSA) கீழ் மண் வள அட்டைத் திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் 12957 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்று வேளாண் துறை உதவி இயக்குநர், திரு. மோகன் கூறினார். மண் பரிசோதனைக்காக மாவட்டத்தில் 5,26,000க்கும் அதிகமான விவசாயிகள் பதிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறினார். நிலங்களில் பயிர்கள் எதுவும் இல்லாமல் இருக்கும் இந்த சமயம் தான் இதற்கு உகந்தது என்பதால் வேளாண் அலுவலர்கள் நிலங்களைப் பார்வையிட்டு வருகிறார்கள். மண் வள அட்டைத் திட்டத்தில் 54,50,116 விவசாயிகள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். நிலத்தின் நடுவில் இருந்தும் மற்றும் நான்கு முனைகளில் இருந்தும் 15இல் இருந்து 20 செ.மீ ஆழத்தில் மண் மாதிரி எடுக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மண் வள ஆய்வகத்தில் நிபுணர்களால் இது ஆய்வு செய்யப்படும்.

நல்ல அறுவடையை பெற எவ்வளவு உரங்கள் மற்றும் உயிரி ஊட்டச்சத்துகள் தேவைப்படுகின்றன என்பதைப் பற்றிய ஒரு சிறந்த யோசனையை வழங்குவதில் மண் வள அட்டை மிகவும் உதவிகரமாக இருப்பதாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள நஞ்சை சங்கேந்தி கிராமத்தை சேர்ந்த விவசாயியான அன்பரசன் கூறுகிறார். எந்த விதமான பயிர்களை நிலம் நன்றாக ஆதரிக்கும் என்பதை முடிவு செய்யவும் அது உதவும். மண் வள நிலைமையைப் பற்றிய விழிப்புணர்வும் உரங்களின் பங்கும் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க உதவும் என்று வேளாண் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். தன்னுடைய நிலத்தில் உள்ள மண்ணை வேளாண் வல்லுநர்கள் பரிசோதனை செய்தார்கள் என்றும் மண் வள அட்டையை வழங்கினார்கள் என்றும் திருச்சி புள்ளம்பாடியைச் சேர்ந்த விவசாயியான குமரவேல் கூறினார். நிலத்தில் எந்த வகையான உரத்தை எவ்வளவு இட வேண்டும் என்பதைத் தெரிந்துக் கொள்ள அது உதவியதாக அவர் கூறினார். இந்த வழியின் மூலம் அதிக உரங்களை இடாமல் தான் பணத்தை சேமித்ததாகவும் நல்ல விளைச்சலைப் பெற்றதாகவும் அவர் கூறினார்.

நாட்டுக்கு உணவிடும் தலையாய கடமையைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் பொது முடக்கத்தின் போது கூட விவசாயிகளுக்கு ஓய்வில்லை. செயல்மிகு கொள்கைகள் மற்றும் உதவிகள் மூலம் அவர்களுக்குத் தேவை ஏற்படும் சமயங்களில் அரசுகள் அவர்களோடு நிற்கின்றன.

- M. **தரணி**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : makkalvisaranainews@gmail.com
Cell : 93821 33334, 93821 44446



# பிரதமர் ஏழைகள் மறுவாழ்வுத் திட்டம்

## ஏழைகள், தேவை இருப்போர்கள் மீது அக்கறை செலுத்துகிறதா?

பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகளின் இன்னல்களை குறைக்க பிரதமரின் ஏழைகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் நிவாரண தொகுப்புகளை மத்திய அரசு கடந்த மாதம் அறிவித்தது. நிவாரணத் தொகுப்பின் மதிப்பு ரூ.1.70 கோடியாக இருக்கும் என்று மத்திய நிதி அமைச்சர், திருமதி. நிர்மலா சீதாராமன் அறிவித்தார். நாட்டுக்கு உணவளிக்க பாடுபடும் விவசாயிகள், நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் அவசியமான தன்னலமற்ற சேவையை செய்யும் மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் சுகாதார பணியாளர்கள், தினக்கூலி தொழிலாளர்கள், வீடில்லா ஏழைகள் மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோரை பொது முடக்கம் பெரிதும் பாதித்துள்ளது. பொது முடக்கம் ஏற்படுத்தியுள்ள திடீர் அதிர்ச்சியை போக்க, மேற்கண்ட அனைத்து குழுக்களுக்கும் நிதி ஆதரவு அளிக்க பல்வேறு திட்டங்களின் மூலம் உடனடி நிவாரண நடவடிக்கைகளை மத்திய அரசு அறிவித்தது.

மத்திய அரசின் அறிவிப்பின் படி, 8.27 கோடி விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் விதமாக பிரதமரின் விவசாயிகள் திட்டத்தின் கீழ் ரூ. 2,000/- முன்பணமாக வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக பொது முடக்கத்தின் போது பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இந்த உதவியை வரவேற்றுள்ளனர். பிரதமரின் விவசாயிகள் திட்டத்தின் கீழ் ரூ. 2,000/- முன்பணமாக வழங்கியதற்காக பிரதமருக்கு நன்றி கூறுகிறார் புதுக்கோட்டை ஆலங்குடி கொத்தக் கோட்டை கிராமத்தை சேர்ந்த விவசாயியான திரு.வீரய்யா. பொது முடக்க சமயத்தில் அது தனக்கு மிகவும் உதவிகரமாக இருந்ததாக அவர் கூறுகிறார்.

வேறு எந்த வருமானமும் இல்லாததால், பொது முடக்கத்தின் போது அளித்த இந்த உதவிக்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறார் தென்காசி பனையூர் கிராமத்தை சேர்ந்த விவசாயியான திரு. பாலு. இந்தத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூ. 6000/- அளிப்பதற்கும் மத்திய அரசுக்கு அவர் நன்றி கூறினார்.

மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்கள் மற்றும் பாதுகாப்பான இடைவெளி போன்ற கடும் கட்டுப்பாடுகளோடு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் வேலைகளை மீண்டும் தொடங்க மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்தது. கூடுதலாக, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலைகளுக்கான கூலி உயர்வு 13.62 கோடிக்கும் அதிகமான குடும்பங்களுக்கு உண்மையிலேயே ஆறுதல் அளித்தது. திருச்சி உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள் கடந்த சனிக்கிழமை மறுபடி ஆரம்பித்தன. தூத்துக்குடி உமரிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த திருமதி. ஹேமலதா, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 100 நாள் வேலைகளை மறுபடி தொடங்க அனுமதித்ததற்காக பிரதமருக்கு நன்றி தெரிவிக்கிறார். கோவிட்-19 பொது முடக்கதின் காரணமாக மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டதாகக் கூறிய அவர், தற்போது உயர்த்தப்பட்ட கூலியான ரூ. 282 உடன் வேலைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது ஒரு வெகுமதி போன்றது என்கிறார். மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மரங்களை நடுதல் மற்றும் செடிகளுக்கு நீரூற்றுதல் போன்றவற்றை தங்களது கிராமத்தில் அவர்கள் செய்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

கட்டிடம் மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நிவாரண நிதியை பயன்படுத்தி கட்டுமான தொழிலாளர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டது. பொது முடக்கத்தின் காரணமாக கட்டுமான பணிகள் நின்று விட்டதால், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டுமான தொழிலாளர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ 1,000/- நிதி உதவியுடன், இலவச அரிசி, பருப்புகள் மற்றும் சமையல் எண்ணை ஆகியவை வழங்கப்பட்டன. பிரதமரின் ஏழைகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் 80 கோடி மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் மற்றும் பருப்புகள் வழங்கப்படும்.

செங்கல் சூளை, துணி நெய்தல், மண்பாண்டங்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற சிறு மற்றும் பாரம்பரிய தொழில்களை வாழ்வாதாரத்துக்காக நம்பி பலர் உள்ளனர். அவர்களின் வருமானத்திற்கான வழிகளை பொது முடக்கம் பெரிதும் பாதித்துள்ளது. சில சிறு தொழில்களை மீண்டும் செயல்பட அனுமதிக்கும் அரசின் முடிவை அவற்றை சார்ந்துள்ள மக்கள் வரவேற்கின்றனர். வேலூர் களந்தோப்பு கிராமத்தை சேர்ந்த செங்கல் சூளை தொழிலாளரான திரு. ராஜகோபால், செங்கல் சூளை வேலைகளை அரசு அனுமதித்துள்ளது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவிக்கிறார். ஒன்றரை மாதத்துக்கும் மேலாக தங்களால் வேலை செய்ய முடியவில்லை என்றும், உணவுக்கு கூட கஷ்டம் அனுபவித்ததாகவும் அவர் கூறினார். மத்திய மற்றும் மாநில அரசுகளால், இவர்கள் தற்போது தங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கி உள்ளனர். எட்டு கோடி ஏழை குடும்பங்களுக்கு மூன்று மாதங்களுக்கு இலவச சமையல் எரிவாயு உருளைகளையும், மகளிர் ஜன் தன் கணக்குகளில் ஏப்ரல் முதல் ஜூன் வரை மாதம் ரூ.500ம் அரசு வழங்குகிறது.

கோவிட்-19 பெருந்தொற்றுடன் முன்னணியில் நின்று போராடும் வீரர்களுக்கு பெரியதொரு நம்பிக்கையை அளிக்கும் விதமாக, களத்தில் உள்ள ஒவ்வொரு சுகாதார பணியாளருக்கும் ரூ. 50 லட்சம் காப்பீட்டை மத்திய அரசு உறுதி செய்துள்ளது. மருத்துவர்கள் உட்பட 22 லட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களுக்கு இது உறுதியை அளிக்கும். செயல்கள் கடுமையாகும் போது, கடினமானது கடந்து போகும் என்னும் ஆங்கில பழமொழிக்கேற்ப, ஆட்கொல்லி வைரஸ் விரைவில் ஒழிக்கப்பட்டுவிடும் என்னும் நன்னம்பிக்கையோடு, கொரோனா பெருந்தொற்றை எதிர்த்து போரிடுவதில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு நாளுக்கு நாள் பிணைப்புள்ளதாகவும் வலுவானதகவும் ஆகிக்கொண்டு வருகிறது.

**- அகிலாண்டேஸ்வரி**

# பாவம் பாரதி

ஒருவர்மீது நம்பிக்கை வைக்கலாம்
ஆனால் அசைக்கமுடியாத
நம்பிக்கை வைக்கக்கூடாது
நான் ஒருவர் மீது
அசைக்கமுடியாத
நம்பிக்கை வைத்திருந்தேன்
நீண்ட நெடுங்காலமாக
என்னுடைய அசாத்திய நம்பிக்கையை
மாற்றிக்கொள்ள முடியவில்லை

குட விளக்காக வெளிச்சத்துக்கு
வராமலே இருந்து விட்டேன்
உண்மையை எவ்வளவு காலம்
மறைக்க முடியும்!
மறக்க முடியும்!!



அசட்டுத்தனமான பந்தம்
என்ற மாயையில்
மூழ்கி இருந்தேன்
மாறுவதற்கான
மாற்றுச் சிந்தனை உதிக்கவே
நீண்டகாலம் ஆனது

வீழ்ந்து கிடந்தவன் வீழ்ந்தேகிடப்பான்
என்று எண்ணியவர்கள் முகத்தில்
கரியைப் பூசிக்கொண்டார்கள்
நாம் செய்தது எவ்வளவு பெரிய தவறு
என்று அவர்கள் ஒரு நாளும்
சிந்திக்கப் போவதுமில்லை
அதை நினைத்து நான்
தினமும் வருந்த போவதுமில்லை

“கல்வி சிறந்த தமிழ்நாடு
செல்வம் எத்தனையுண்டு
புவிமீதே அவை யாவும்
படைத்த தமிழ்நாடே”
என்று பாடி பெருமைப்பட்ட பாரதி
இன்று இருந்திருந்தால்
இந்த மதிகெட்ட மாந்தர்களை
நினைத்து வெட்கி
தலைகுனிந்து இருப்பான்.

பாவம் பாரதி
இன்று இல்லை
இப்படிப்பட்ட கீழ் நிலை
மனிதர்களின் செயலுக்கு
காலம் ஒவ்வொரு ஒரு பதிலை
தந்துகொண்டுதான் இருக்கிறது.

- கவிஞர் நிவேதிதா

# கல்வித் துறை செயல்பாடுகள் குறித்து பிரதமர் மோடி ஆய்வு





கல்வித் துறை தொடர்பான பிரச்சினைகள் குறித்தும், தேசியக் கல்விக் கொள்கை உள்ளிட்ட சீர்திருத்தங்கள் குறித்தும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆய்வு நடத்தினார். கல்வித் துறையில் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து இந்த ஆலோசனையில் முக்கியத்துவம் தரப்பட்டது. கற்றல் திறனை மேம்படுத்துதல், கல்விக்கான இணையதளம், ஆன்லைன் வகுப்புகள், பிரத்யேகமான சேனல்களில் வகுப்புகளுக்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு போன்ற வகைகளில் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் ஆகியவை குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

எல்லோருக்கும் தரமான கல்வி கிடைக்க வகை செய்தல், ஆரம்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், பல மொழிகளில் கவனம் செலுத்தும் வகையில் தேசிய அளவிலான பாடத் திட்டங்கள் அமல் செய்தல், 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான தொழில் திறன்களை வளர்த்தல், விளையாட்டு, கலை, சுற்றுச்சூழல் விஷயங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பள்ளிக்கூடங்கள் மற்றும் உயர்கல்வி நிலையில் பல்வேறு வழிமுறைகளில் தொழில்நுட்ப செயல்பாடுகளை ஊக்குவித்தல் பற்றியும் பேசப்பட்டது. ஆன்லைன் முறையில் கற்பித்தல், தொலைக்காட்சி சேனல்கள், வானொலி, மூலமான கல்வி ஆகியவை பற்றியும் வலியுறுத்தப்பட்டது. உலக அளவிலான தரத்துக்கு இணையாக இருக்கும் வகையில் இந்தியாவின் கல்வி முறையை மாற்றி அமைக்கும் வகையில் சீர்திருத்தங்கள் செய்வது குறித்தும், பங்கேற்புடன் கூடியதாக, பயன்தரக் கூடியதாக, இந்திய கலாச்சாரம் மற்றும் மாண்புகளை வலியுறுத்துவதாக புதிய சீர்திருத்தங்கள் அமைய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. குழந்தைப் பருவத்தில் கவனித்தல் மற்றும் கல்வி, அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு, சமகாலத்தைய கற்பித்தல் கலைகளை ஏற்றுக் கொள்ளுதல், இந்தியாவின் பன்முகக் கலாச்சார மற்றும் மொழி வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்தும், முன்கூட்டியே தொழிற்கல்வி கற்பதில் சிறப்பு கவனம் செலுத்தும் வகையிலும் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

எல்லோருக்கும் தரமான கல்விக்கான வசதிகள் கிடைப்பதை உறுதி செய்து 'அறிவுத் திறனில் உலக அளவில் வல்லமை மிக்க' இந்தியாவை உருவாக்குவதற்காக, துடிப்பான அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கும் வகையில் கல்வித் துறை சீர்திருத்தங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த அனைத்து இலக்குகளையும் எட்டுவதற்கும், செம்மையான கல்வி நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும், செயற்கைப் புலனறிதல் உள்ளிட்ட தொழில்நுட்பப் பயன்பாடுகள் ஊக்குவிக்கப்படும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

– S. சரவணன்



# கடன் உதவியை வங்கிகள் உடனுக்குடன் வழங்க வேண்டும் - முதல்வர் பழனிசாமி



தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டக் கூலியை தொழிலாளர்களின் வீடுகளுக்கே சென்று வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற மாநில அளவிலான வங்கிகளின் குழுக் கூட்டத்தில் முதல்வர் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. முன்னாள் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ரங்கராஜன் தலைமையில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திட ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து உத்தரவிட்டேன். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்யும் விதமாக இன்று நடைபெறும் மாநில அளவிலான வங்கிகளின் குழு கூட்டம் நடத்தப்படுகிறது. பல்வேறு தொழில்களுக்கு இந்த நேரத்தில் அத்தியாவசியத் தேவை வங்கிகளின் கடன் உதவி தான்.

தமிழ்நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக கடன் வைப்பு தொகை விகிதம் நூறு சதவீதத்தை காட்டிலும் அதிகமாகவே இருந்துள்ளது. இது, தமிழ்நாட்டில் தொழில் செய்வதற்கு தொழில்

நிறுவனங்கள் கடன்களை பெற அதிகளவில் முன்வருகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், வங்கிகளும் முனைப்போடு செயல்படுவது தெளிவாகிறது. இது போன்ற ஒத்துழைப்பை நான் உங்களிடமிருந்து இக்கால கட்டத்தில் தொடர்ந்து எதிர்பார்க்கிறேன். இந்த ஆண்டில் (2020-21)கான 4,21,404 கோடி ரூபாய் முதலீடு உள்ள ஆண்டுக் கடன் திட்டத்தை வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆண்டு கடன் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு ரூபாய் 1,48,859 கோடி, குறு, சிறு தொழில்களுக்கு 92,075 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. 2020-21ஆம் ஆண்டு தமிழ்நாடு வளர்ச்சிக்கு ஒரு உத்வேகம் வழங்குமென்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. மூன்று முக்கியமான துறைகளைப் பற்றி இன்றைய தினம் விவாதிக்க உள்ளேன்.

மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இருக்கின்றதால், டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி முழுவீச்சில் செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு வேளாண் உற்பத்தி மிகவும் இன்றியமையாதது என்பதை கருத்தில் கொண்டு, விவசாயத்திற்கான கடன் உதவியை வங்கிகள் உடனுக்குடன் வழங்கி, விவசாயிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் இது வரை 20 லட்சத்து 20 ஆயிரம் உழவர் கடன் அட்டைகள் விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் அட்டைகளின் மூலம் விவசாயிகள் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வரை விதைகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வாங்க, வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் / வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது. நீங்கள் அனைவரும் உங்கள் பகுதிகளில் சிறப்பு முகாம்களை நடத்தி, இந்த உழவர் கடன் அட்டைகளை அனைத்து விவசாயிகளுக்கும் தாராளமாக வழங்க வேண்டும்.

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு



பல்வேறு புதிய திட்டங்களை சமீபத்தில் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 50 லட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்நிறுவனங்களில் சுமார் ஒரு கோடி மக்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள். தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் சிறு, குறு தொழில் துறையின் பங்கு ஏறத்தாழ 30 சதவீதமாகும். அரசின் சிறப்பு சலுகை திட்டங்களை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பது நம் அனைவரின் கடமையாகும்.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 3 லட்சம் கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி அதிகளவில் நம்முடைய மாநிலத்திற்கு கிடைக்க நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் 35 இலட்சம் நபர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கான கூலித்தொகையை வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தற்பொழுது, கரோனா வைரஸ் தொற்று இருக்கின்றதால் ஏழை மக்கள் அங்கு சென்று கூலித் தொகையை வாங்குவது கடினமாக இருக்கிறது. கரோனா வைரஸ் நோய் தடுப்புப் பணியில் நாம் ஈடுபட்டுள்ள இந்தக் காலக்கட்டத்தில் (மூன்று மாத காலத்திற்கு மட்டும்), இந்த நோய் குறைகின்ற வரை அவர்கள் இந்தத் தொழில் புரிகின்ற இடங்களுக்கு வங்கிகளின் அதிகாரிகளே சென்று கூலித் தொகையை அவர்களிடம் நேரடியாக வழங்கினால் சரியாக இருக்கும் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

**- ஆசிரியர்**

# தமிழ் இலக்கியத்தில் வெட்டுக்கிளி தாக்குதல்

# 1662ல் மதுரையில் நடந்தது என்ன?

வெட்டுக்கிளி தாக்குதல் இந்தியாவின் வடமேற்குப் பகுதியை தற்போது தாக்க ஆரம்பித்துள்ளது. தக்காணப் பீடபூமியைத் தாண்டி அவை வரும் வாய்ப்பில்லை என்கிறது தமிழக வேளாண் துறை. ஆனால், தமிழ் இலக்கியத்தில் வெட்டுக்கிளி தாக்குதல் குறித்த பதிவுகள் விரிவாகவே இருக்கின்றன.

வெட்டுக்கிளி தாக்குதல் குறித்து புதன் கிழமையன்று அறிக்கை வெளியிட்ட தமிழக வேளாண்துறை தக்காணப் பீடபூமியைத் தாண்டி அவை வருவதற்கான வாய்ப்பில்லை என்று தெரிவித்திருந்தது.

ஆனால், தமிழ் இலக்கியங்களில் வெட்டுக் கிளி தாக்குதல் குறித்த பதிவுகள் நிறையவே இருக்கின்றன. 1976ல் கி. ராஜநாராயணன் எழுதி வெளிவந்த கோபல்ல கிராமம் நாவல், இம் மாதிரி ஒரு தாக்குதலை விரிவாகவே விவரிக்கிறது.

“ஸ்ரீனி நாயக்கரும் எங்கச்சியும் ஓடிவந்து முற்றத்தில் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனார்கள். அவர்கள் பிரியமாக வைத்து வளர்த்த கறிவேப்பிலைச் செடி மீது இலை தெரியாமல் விட்டில்கள் (வெட்டுக்கிளிகள்) மொய்த்துக் கொண்டிருந்தன.

அவைகளை விட்டில்கள் என்று சொல்வதா அல்லது அதுக்கு வேறு ஏதாவது பெயர் உண்டா என்பது அவர்களுக்குத் தெரியாது. பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்த வளர்ப்புச் செடியில் ஒரு இலைகூட இல்லை!

அதில் உட்கார்ந்திருந்த விட்டில் பூச்சியின் நீளம் முக்கால் சாண், ஒருச்சாண் என்றிருந்தது! இதுக்கு முன்னால் அவர்கள் ஆயுளில் இப்படி, இத்தனை பெரிய விட்டிலைப் பார்த்தது கிடையாது; கேள்விப்பட்டதும் கிடையாது.

எங்கச்சி பயந்துபோய் புருஷனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள். ‘என்ன இது! உலகம் அழிவு காலத்துக்கு வந்துவிட்டதா?

உலகம், பிரளயம் வந்து அழியப்போகும்போது மழை பெய்யுமாம்; நாள் கணக்கில் நிற்காமல் சரமழை பெய்யுமாம். அந்த மழைச்சரத்தின் கனம் யானைத் துதிக்கைத் தண்டி இருக்குமாம். ஆனால், யாரும் விட்டில் பூச்சி வந்து உலகத்தை அழிக்கும் என்று சொல்லலையே?’



அவர் மனைவியை உதறிவிட்டு கோபத்தோடு போய் அந்த விட்டில்களை அடித்து விரட்டினார். செழுமையான அந்தச் செடி இருந்த இடத்தில் ஒரு கம்பும் அதில் சில விளாருகளுமே நின்றுகொண்டிருந்தது பரிதாபமாக இருந்தது.

அவருக்குத் தொண்டையை அடைத்தது. எந்தப் பக்கம் எங்கே திரும்பினாலும் படபடவென்ற சத்தத்துடன் அதே விட்டில்கள். கோபல்ல கிராமமே ஒரு தேன்கூடு மாதிரியும் இந்த விட்டில்கள் அதில் மொய்க்கும் ஈக்களைப்போலவும் காட்சி தந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மனித அபயக் குரல்கள் கர்ண கடூரமாக ஒலிக்க ஆரம்பித்தது. ஜனங்கள் நெஞ்சிலும் வாயிலும் அறைந்துகொண்டு அழும் கூக்குரல் கேட்டது. காடுகளில், விளைந்த கம்மங் கதிர்களுக்குக் காவலாக பரண் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள் திகைத்து, இறங்கிவந்து விட்டில்களை விரட்டிப்பார்த்தார்கள்.

கம்புகளால் அடித்துப் பார்த்தார்கள். சோ சோ என்று கூப்பாடு போட்டுப்பார்த்தார்கள். கதிர்களை மறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த விட்டில், பிறகு கதிர் காணாமல் விட்டில் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது! ஒவ்வொரு பயிரின் கீழிருந்து உச்சி வரைக்கும் விட்டில்கள். அவைகள் மேயும் சத்தம் நெறுக் நெறுக் என்று காடெல்லாம் ஒன்றுபோலக் கேட்டது.

எதைக் கொல்லுவது; எப்படிக் கொல்வது? விட்டிலைப் பிடித்தால், ரம்பம் போன்ற அதன் பின்னத்தங் கால்களால் உதைத்துக் கையை ரணமாக்கி விடுகின்றன. நல்ல மனசு திரவத்தி நாயக்கர் அவருடைய புஞ்சையில் காவல் இருந்தார். கதிர் நன்றாக விளைந்திருந்தது. அவருக்கு மட்டுமல்ல, அந்த வருசம் கிராமம் பூராவுமே அப்படி. நாளைக்குக் கதிரைப்




பிரக்கணும் என்று நினைத்திருந்தபோது இப்படி ஆகிவிட்டது”

பிறகு, இந்த விட்டில்கள் வந்த மாதிரியே போய்விட்டதாகக் குறிப்பிடுகிறார் A. ராஜநாராயணன். பிரிட்டிஷ் ஆட்சி கிராமங்களுக்குப் பரவ ஆரம்பித்த காலகட்டத்தில் இந்த சம்பவம் நடந்ததாக கோபல்ல கிராமம் குறிப்பிடுகிறது.

இதேபோல, சு. வெங்கடேசன் எழுதிய காவல் கோட்டம் நாவலில், மதுரையில் நடந்த வெட்டுக்கிளி தாக்குதல் பற்றி குறிப்பிடப்படுகிறது. மதுரையை சொக்கநாத நாயக்கர் ஆட்சி செய்த காலத்தில் இந்தத் தாக்குதல் நடந்தது.

“சொக்கநாதன் காலத்தில் வானில் தூமகேது தோன்றியது. நிமித்தகர்கள் அதைச் சொல்லியே மக்களைப் பயமுறுத்திக்கொண்டிருந்தனர். அதற்கேற்றார்போல ஒரு மாதத்தில் நம்ப முடியாத பேரழிவு விவசாயத்தில் நேர்ந்தது. வடக்கிலிருந்து வெட்டுக்கிளிகள் படையெடுத்துவந்தன. ஒவ்வொன்றும் சோளக்கதிர் அளவு பெரிதாக இருந்தது. மேகக்கூட்டங்கள் போல வந்து அப்படியே செடிகொடிகள் பயிர்களின் மீது மொய்த்தன. நிலமெங்கும் பெருமழை அடிப்பதுபோல நெறுநெறுவென்று சப்தம். அவை பறந்தவுடன் இலைகளற்ற வெறுந்தண்டுகளே எஞ்சின. இரண்டு நாள் படைபடையாகத் தெற்கு நோக்கிச் சென்றன. நாடே பசுமையற்று மொட்டையாகப் போய்விட்டது. மாசி மாதம் கதிரடிப்புக் களங்களில் புழுதி பறந்தது” என இந்த நிகழ்வைக் குறிப்பிடுகிறார் சு. வெங்கடேசன்.

ஆனால், இது கற்பனையாக எழுதப்பட்ட நிகழ்வல்ல. ஜே.எச். நெல்சன் எழுதிய The Political History of Madura Country புத்தகத்தில் இந்த நிகழ்வு குறிப்பிடப்படுகிறது. மதுரை நாயக்க வம்சத்தின் புகழ்பெற்ற அரசரான திருமலை நாயக்கருக்குப் பிறகு இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் ஆட்சி செய்தார். அவருக்கு அடுத்து ஆட்சி செய்தவர் சொக்கநாத நாயக்கர். இவர் மதுரை ராஜ்ஜியத்தை 1659லிருந்து 1682வரை ஆட்சி செய்தார்.

அதில் 1662ஆம் ஆண்டில் மதுரையில் நடந்த பயங்கரங்களை இவ்வாறு விவரிக்கிறார் ஜே.எச். நெல்சன்.

“1662ஆம் ஆண்டு மதுரை வழக்கத்துக்கு மாறான நிகழ்வுகளை சந்தித்ததால் மக்கள் அச்சத்துடன் இருந்தார்கள். பல குழந்தைகள் பிறக்கும்போதே பற்களுடன் பிறந்தன. ஓநாய்களும் கரடிகளும் புலிகளும் காட்டை விட்டு வெளியேறி மக்கள் வசிக்கும் பகுதிகளில் சுற்றித் திரிந்தன. சில நேரங்களில் இவை தலைநகருக்குள்ளும் கிறிஸ்தவ தேவாலயத்தின் சுற்றுச்சுவருக்கு வெளியிலும் சுற்றித் திரிந்தன. பலர் திடீரென வெளிப்படையான காரணங்கள் ஏதுமின்றி இறந்துபோனார்கள். முன்பு அறிந்திராத பல வகையான பூச்சிகள் கூட்டம் கூட்டமாகத் தோன்றி பொறுத்துக்கொள்ள முடியாத துர்நாற்றத்தைப் பரப்பி காற்றை மாசுபடுத்தின இவை மக்களைக் கடித்து பொறுக்க முடியாத வலியை ஏற்படுத்தின. காலரா பரவியதால் ஒரே குடும்பத்தில் பதினைந்து நாட்களில் ஏழு பேர் இறந்துபோனார்கள்.”

நாட்டாரியல் வரலாற்றாய்வாளரா ஏ.கே. பெருமாள், மதுரை, திருவிதாங்கூர் பகுதிகளில் வெட்டுக்கிளி தாக்குதல்கள் இருந்திருக்கின்றன என்கிறார்.

“17ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மக்கள், வெட்டுக்கிளி தாக்கியதால், வரியைக் குறைக்க வேண்டுமென மகாராஜாவுக்கு விண்ணப்பம் செய்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. அதேபோல பில்லுகட்டி நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த சிலரிடம் பேசியபோது அவர்கள், மதுரையைச் சேர்ந்தவர்கள் என்றும் வெட்டுக்கிளி தாக்குதலின்போது, கன்னியாகுமரி மாவட்டத்தை நோக்கி நகர்ந்ததாகவும் அவர்கள் கூறினார்கள். இது நடந்தது 18ஆம் நூற்றாண்டு” என்கிறார் ஏ.கே. பெருமாள்.

அவர் மேலும் ஒரு சுவாரஸ்யமான தகவலைச் சொல்கிறார். அதாவது இந்த பில்லுகட்டி நாயக்கர் சமூகத்தினர், வெட்டுக்கிளி தாக்குதலைச் சமாளிக்க வயல்களில் பரண்களைக் கட்டி வௌவால்களை வளர்த்ததாக கூறினார்கள் என்றும் தெரிவிக்கிறார்.

**– S. செந்தில் குமார்**

# மைக்ரோசாஃப்ட் செயற்கை நுண்ணறிவு



# ரோபோக்களிடம் வேலையைப் பறிகொடுக்கும் பத்திரிகையாளர்கள்

மைக்ரோசாஃப்ட் நிறுவனம் தன்னுடைய எம்.எஸ்.என் வலைத்தளத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் சிலரை வேலையிலிருந்து அனுப்பிவிட்டு அவர்களுக்கு பதிலாக செய்திகளை தேர்தெடுக்க தானாக இயங்கும் அமைப்பை பயன்படுத்த போவதாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. எம்.எஸ்.என் வலைதளத்தில் செய்தி நிறுவனங்களின் செய்திகளை தேர்ந்தெடுப்பது, தலைப்புகளை வைப்பது அதற்கேற்ற புகைப்படங்கள் வைப்பது போன்ற வேலைகளை தற்போது பத்திரிகையாளர்கள் பார்த்துக் கொண்டுள்ளனர். இந்த செய்தி தயாரிப்பு வேலையை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் அந்நிறுவனம் இனி செய்யவுள்ளதாக சிலர் சியாட்டல் டைம்ஸிடம் கூறியுள்ளனர்.

இது தொழில் ரீதியான பரிணாம வளர்ச்சி என மைக்ரோசாஃப்ட் நிறுவனம் கூறியுள்ளது. "மற்ற நிறுவனங்களை போல மைக்ரோசாஃப்ட்டும் வழக்கமாக தொழில் ரீதியான பரிணாம வளர்ச்சியை செய்து வருகிறது. இது சில இடங்களில் முதலீடுகளை அதிகரிக்கும். சிறிது காலத்திற்கு பிறகு நிறைய பேரை வேலையை விட்டு அனுப்ப காரணமாக அமையலாம். ஆனால் இந்த முடிவு கோவிட்-19ஆல் எடுத்த முடிவு அல்ல," என மைக்ரோசாஃப்ட் கூறியுள்ளது. மற்ற நிறுவனங்களை போல பிற செய்தி நிறுவனங்களுக்கு அவர்களின் செய்தியை வலைத்தளத்தில் பயன்படுத்த மைக்ரோசாஃப்ட்டும் பணம் வழங்கி வருகிறது.

ஆனால் எந்த செய்தி வர வேண்டும் அது எவ்வாறு தெரிய வேண்டும் என்பதை முடிவு செய்ய மைக்ரோசாஃப்ட் நிறுவனம் பத்திரிகையாளர்களை வைத்துள்ளது. சுமார் 50 ஒப்பந்த செய்தி தயாரிப்பாளர்கள் ஜூன் மாதத்தில் தங்கள் வேலையை இழப்பார்கள் என சியாட்டல் டைம்ஸ் கூறியுள்ளது. மற்ற முழு நேர பத்திரைகையாளர்கள் இருப்பார்கள் எனவும் சியாட்டல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

"எங்கள் வேலையை ஓர் இயந்திரம் பார்த்து விடும் என நினைப்பது நியாயமானதல்ல. ஆனால் அதுதான் நடக்கிறது", என்று சியாட்டல் டைம்ஸ்க்கு இதனால் பாதிக்கப்படும் ஊழியர் ஒருவர் கூறியுள்ளார். வேலையை விட்டு அனுப்பப்பட்ட சில பத்திரிகையாளர்கள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இதழியலுக்கான கோட்பாடுகளை முழுவதும் அறிந்திருக்காது, இதனால் தவறான செய்திகள் வெளியிட வாய்ப்புள்ளது என எச்சரித்துள்ளனர்.

வேலையை விட்டு அனுப்பப்படுபவர்களில் 27 பேரை பிரிட்டனின் பி.ஏ மீடியா வேலைக்கு எடுத்துள்ளது என கார்டியன் பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. அவர்களில் ஒருவர் , "நான் தானியங்கி மற்றும் செய்ற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் மூலம் எவ்வாறு நம் வேலைகள் பறிபோகும் என்பதை பற்றி படித்து கொண்டிருப்பேன். இப்போது என்னுடைய வேலையையே அது எடுத்துக்கொண்டது," என்று கூறினார்.

ரோபோட் இதழியல் எனக் கூறப்படும் இந்த முறையை செலவை குறைப்பதற்காக மைக்ரோசாஃப்ட் நிறுவனம் செயல்படுத்தி பார்க்கிறது. இது எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிய கூகுள் நிறுவனமும் சில திட்டத்தில் முதலீடு செய்துள்ளது.

- M. முருகம்மாள்




# PAN எண் பெற புதிய திட்டம் பத்தே நிமிடத்தில் இலவசமாக இணைய வழியில் பெறலாம்

பத்து நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் நிரந்தரக் கணக்கு எண்ணை (PAN) இணையம் வாயிலாக பெறும் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று தொடங்கி வைத்துள்ளார்.

ஆதார் எண்ணையும், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண்ணையும் வைத்திருக்கும் நிரந்தரக் கணக்கு எண் விண்ணப்பதாரர்களுக்கு இந்த வசதி தற்போது கிடைக்கும். காகிதமில்லா முறையில் இணையம் வாயிலாக செய்யப்படும் இந்த ஒதுக்கீடு மூலம், மின்-நிரந்தக் கணக்கு எண் (e-PAN) விண்ணப்பதாரர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனுக்குடன் நிரந்தரக் கணக்கு எண்ணை பெறும் வசதி விரைவில் தொடங்கப்படும் என்று இந்த ஆண்டின் தொடக்கத்தில் மத்திய நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார்.

"நிரந்தரக் கணக்கு எண் ஒதுக்கீட்டை மேலும் எளிமைப்படுத்தும் விதத்தில், விரிவான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் தேவை இல்லாமலேயே, ஆதாரின் அடிப்படையில் உடனடியாக நிரந்தரக் கணக்கு எண்ணை இணையத்தில் ஒதுக்கீடு செய்யும் முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும்" என்று நிதி நிலை அறிக்கை உரையின்போது நிர்மலா சீதாராமன் கூறியிருந்தார்.

இந்த நிலையில், ஆதார் சார்ந்த மின்-கே.ஒய்.சி (e-KYC) என்கிற வாடிக்கையாளர் தகவல்களை அறிந்துகொள்ளும் முறை மூலம் தற்போது உடனடி நிரந்தரக் கணக்கு எண் பெறும் இந்த வசதி நேற்று முறைப்படித் தொடங்கப்பட்டது.

ஆனால், இதன் 'மாதிரிப் பதிப்பு' சோதனை முறையில் வருமான வரித் துறையின் இணையதளத்தில் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு மார்ச் மாதம் வரை 6,77,680 நிரந்தர கணக்கு எண்கள் ஒவ்வொன்றும் பத்தே நிமிடங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக மத்திய நிதித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**இந்த சேவையை பெறுவது எப்படி?:** வருமான வரித்துறையின் இணையவழி வரித்தாக்கல் இணையதளத்திற்கு சென்று "Get New PAN" என்ற தெரிவை சொடுக்கிவிட்டு, உங்களது ஆதார் எண்ணை பதிவு செய்யுங்கள்.

அடுத்தடுத்த படிநிலைகளில், ஆதார் எண்ணுடன் பதிவு செய்யப்பட்டுள்ள அலைபேசி எண்ணுக்கு OTP எண் அனுப்பப்படும். அதை சரியாக பூர்த்தி செய்ததும், உங்களது ஆதாரில் உள்ள தனிப்பட்ட விவரங்கள் திரையில் காட்டப்படும்.

அந்த விவரங்களுக்கு நீங்கள் ஒப்புதல் தெரிவித்ததும், அடுத்த படிநிலையில் விருப்பம் இருப்பின் மின்னஞ்சல் முகவரியை பதிவிட்டு அதை உறுதி செய்து கொள்ளலாம்.

இந்த செயல்முறை முடிந்ததும், 15 இலக்க ஒப்புதல் எண் (Acknowledgment number) ஒன்று விண்ணப்பிப்பவருக்கு தரப்படும். இந்த எண்ணை பயன்படுத்தி இ-பான் கார்டை அதே தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது விண்ணப்பத்தின் நிலவரத்தை தெரிந்து கொள்ளலாம். ஆதார் அட்டையுடன் மின்னஞ்சல் முகவரி இணைக்கப்பட்டிருந்தால், மின்னஞ்சல் மூலமாகவும் விண்ணப்பதாருக்கு இ-பான் அனுப்பப்படும்.

– A.N. **சேதுரமன்**

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பாக பத்திரி
























# கையாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது











தமிழகம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த நாள் முதல் தொய்வு இல்லாமல் பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் பலர் வறுமையில் வாடும் நிலையில் உள்ளனர். அதில் பலருக்கு ஊதியமும் முறையாக வழங்கப்படாமல் இருப்பதை கருத்தில் கொண்டு, தமிழ் பத்திரிக்கை எழுத்தாளர்கள் சங்கம் சார்பில் சென்னையில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் பலருக்கு 25 கிலோ அரிசி மூட்டை, சமையல் எண்ணெய், மளிகைப் பொருட்கள் வாங்க ரூபாய் 500/- ரொக்கமும் ஊட்ட சத்து மாவு 500 கிராம் மற்றும் முகக் கவசங்கள் ஆகியவை தமிழ் பத்திரிக்கை எழுத்தாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு கி.ராமசுப்பிரமணியன் ஆசிரியர் கல்வி டுடே, மாநில பொதுச் செயலாளர் முனைவர் ஆ.மவுரியன் ஆசிரியர் மக்கள் விசாரணை தலைமையில், மாநில ஒருங்கிணைப்பாளர் வ.அருணாசலம் அவர்கள் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக திரு I.விஜயன் DD பொதிகை உதவி இயக்குனர் - செய்தித் துறை அவர்கள், திரு G.சத்யநாராயணன் அவர்கள் ஆசிரியர் பீப்பிள் டுடே. சென்னை எம்.ஜி.ஆர் நகரில் உள்ள தமிழ் பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில், பத்திரிகையாளர்களுக்கு 25.05.2020 திங்கட்கிழமை காலை 10.30 மணி அளவில் பொருட்கள் வழங்கப்பட்டது.

இவர்களுடன் தூய்மைப் பணியாளர்கள் 10 நபர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. பொருளாதாரத்தில் நலிந்த பத்திரிக்கையாளர்களுக்காக நலத்திட்ட உதவிகளுக்கு பெரிதும் உதவியாக இருந்த மாநில பொருளாளர் S.சுப்பிரமணியன் அவர்கள், நம் சங்கத்தின் சட்ட ஆலோசகர் M.சுதாகர் அவர்கள், மாநில துணைத் தலைவர் K.ரமேஷ் குமார் அவர்கள், மாநில துணைச் செயலாளர் திரு V.யுவராஜ் அவர்கள் ஆசிரியர் கடல் துளிகள், மாநில செயற்குழு உறுப்பினர் திரு அழகர்சாமி அவர்கள், மாநிலத் துணைத் தலைவர் திரு அனந்த கிருஷ்ணன் அவர்கள் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் அனைவரின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றும் உங்கள் தோழமையுடன் முனைவர் ஆ.மவுரியன் ஆசிரியர் மக்கள் விசாரணை மாநில பொதுச் செயலாளர் தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம், சென்னை-78.

ஒரு பக்க சிறுகதை

# குரங்கு கை

ஒரு சிறிய காடு. அங்குள்ள ஒரு மரத்தில் இரண்டு தூக்கணாங் குருவிகள் கூடுகட்டி வாழ்ந்துவந்தன. அதே மரத்தில் ஒரு குரங்கும் வசித்துவந்தது. தூக்கணாங்குருவிகள் தன் கூட்டில் ஓய்வெடுக்கும்போது, அந்தக் குரங்கு மரக்கிளையில் சாய்ந்துகொண்டு ஓய்வெடுக்கும்.

இதனைப் பார்த்த ஆண் தூக்கணாங்குருவி, ‘குரங்கே நீயும் எங்களைப் போல ஒரு கூடுகட்டிக்கொண்டு அதில் வாழலாமே! என்றது.

குரங்கு, ‘எனக்குக் கூடுகட்டத் தெரியாது’ என்றது.

‘கைகள் இல்லாத நாங்களே கூடுகட்டும்போது கைகள் இருக்கும் நீ ஏன் கூடுகட்டப் பழகிக்கொள்ளக் கூடாது?’ என்றது ஆண் தூக்கணாங்குருவி.

‘நான் எதைப் பழகவேண்டும் என்பது எனக்குத் தெரியும். நீ எனக்கு அறிவுரை கூறவேண்டாம்’ என்று குரங்கு கூறியது.

அப்போது பெண் தூக்கணாங்குருவி, ஆண் குருவியைப் பார்த்து, ‘உங்களுக்கு ஏன் இந்த வேலை? அந்தக் குரங்கு கூடுகட்டினால் என்ன, கட்டாவிட்டால் நமக்கு என்ன? நீங்கள் ஏன் அந்தக் குரங்குக்கு அறிவுரை கூறுகிறீர்கள். அந்தக் குரங்கு கோபப்பட்டு ஏதாவது செய்துவிட்டால் நமக்குத்தானே தொல்லை. உங்களுக்கு அறிவேயில்லை! ’ என்று திட்டி அடக்கியது.

ஒருநாள் அந்தக் காட்டில் பெரும் புயற்காற்று வீசியது. கனமழை பொழிந்தது. அந்த மரமே ஆடியது. இரண்டு தூக்கணாங் குருவிகளும் தன்கூட்டில் பத்திரமாக அமர்ந்துகொண்டு மழையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன.

அப்போது குரங்கு மட்டும் மழையில் நனைந்து, குளிரில் நடுங்கியபடியே அந்த மரத்திற்கு வந்தது. அதனைப் பார்த்த இரண்டு தூக்கணாங்குருவிகளும் இரக்கப்பட்டன.

பெண் தூக்கணாங்குருவி, ‘அந்தக் குரங்கிடம் ஏதும் பேசாமல் அமைதியாக இருங்கள்!’ என்று ஆண் குருவியிடம் சொன்னது.



ஆனால் ஆண் தூக்கணாங்குருவி அதைக் கேட்காமல், குரங்கைப் பார்த்து, ‘ஏய், குரங்கே! ஒரு கூடு கட்டிக்கொள் என்று நான் அன்றே உனக்கு அறிவுரை கூறினேன் அல்லவா? அப்போதே உன் கைகளால் கூடுகட்டப் பழகியிருந்தால், இன்று ஒரு கூட்டினைக் கட்டியிருப்பாய். எங்களைப் போல நீயும் மழையில் நனையாமல் நிம்மதியாக இருந்திருக்கலாம். நீ தான் என் பேச்சைக் கேட்க வில்லை. இப்போது அவஸ்தைபடுகிறாய்!’ என்றது.

குரங்குக்கு அவமானமாக இருந்தது. ‘இந்தச் சின்னக் குருவி நமக்கே அறிவுரை கூறுகிறதா!’ என்று நினைத்துக் கோபப்பட்டது. ‘எனக்குக் கைகள் இருக்கிறது. அந்தக் கைகளுக்குக் கூடு கட்டத்தெரியாது. ஆனால், ஒரு கூட்டினைப் பிரித்துவிட அந்தக் கைகளுக்கு நன்றாகத் தெரியும்’ என்று கூறி, அந்தத் தூக்கணாங்குருவிகளின் கூட்டினைப் பிரித்துப் போட்டுவிட்டது.

அந்தக் குரங்கினைப் போலவே, இந்த இரண்டு தூக்கணாங்குருவிகளும் மழையில் நனைந்து, குளிரில் நடுங்கத் தொடங்கின.

**- நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.



"ஆரோக்கிய சேது"
கைப்பேசி செயலி
Aarogya Setu
Aarogya Setu
நீங்கள் செய்ய வேண்டியது. இந்த செயலியை (App) உங்கள் மொபைலில் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.
ப்ளூடூத், ஜிபிஎஸ்ஸை (Bluetooth, GPS) ஆன் செய்யுங்கள்.
லொக்கேஷன் (Location) என்ற இடத்தில் ஆல்வேஸ் (Always) என்பதைத் தேர்வு செய்யுங்கள்.
நீங்கள் எதிர்பாராமல் சமீபத்தில் தொடர்பு கொண்ட யாருக்கேனும் கோவிட் - 19 பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருந்தால், உங்களுக்கு அலெர்ட் (Alert) அனுப்பப்படும்.
ஒருவேளை உங்களுக்கு நோயின் அறிகுறிகள் இருந்தால், நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், சரியான தனிமைப்படுத்தும் வழிகளையும், விளக்கங்களையும் உங்களுக்கு அலெர்ட்டுடன் தெரிவிக்கப்படும்.
கொரோனா பற்றிய
எச்சரிக்கை நமது கையில்...
குரல்வழிச் சேவை INTERACTIVE VOICE RESPONSE SYSTEM 94999 12345
DPH
App Store
Aarogya Setu
Google Play
Aarogya Setu Mobile App
NHM_TN
NHM Tamil Nadu
Mediacell National Health Mission #StopCoronaTN
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Posted at EGMORE RMS / 1 (Patrika Channel). **June - 2020**
RNI No.: **TNTAM44870/2012**. Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month

# APPLE PRINTERS








*We Can Do any Printing Job*

**BROCHURES - MAGAZINE - BOOKS - BUSINESS CARDS**
**ID CARDS - CREATE LOGO - ENVELOPES - CATALOGS**
**STICKERS - GRAPHICS ELEMENTS AND ANYTHING**

# 7/13, PONMANACHEMMAL STREET,
M.G.R NAGAR, CHENNAI - 600 078.
93821 33334, 044 - 4861 5321
appleprintersam@gmail.com